12. Is the cow dead, or the bandy bullock ?	பசு செத்ததா, பண்டிமாடு செத்ததா? Paçu çettadâ : bandi-mâḍu çettadâ ?
13. The villagers lay down [to sleep] in the jungle.	ஊரார் காட்டில் படுத்தார்கள். Ûrâr kâṭṭil paḍuttârgaḷ.

2. The plural noun with singular predicate like the Greek. Compare Third Grammar 137. The name given to *anomalies* of the kind is வழுவமைதி [வழு = *fault*, அமைதி = *consent.*] = *idiomatic permission of a faulty construction.*

12. The disjunctive *or* is not needed in Tamil. You may use அல்லது for *or*.

EXERCISE 18.

TAMIL.	ENGLISH.
63. *(a.)*	
1. ஒரு வஸ்திரத்தைக் கட்டினான். Oru vastirattei kaṭṭinân.	He tied on a cloth.
2. தாயிடத்தில் பிள்ளை தூங்குகிறது.... Tayiḍattil piḷḷei tûngugirradu.	The child sleeps with [its] mother.
3. காட்டிலே உனக்கு என்னத்தைக் காட்டினான்? Kâṭṭilê unakku ennattei kâṭṭinân?	What did he show you in the jungle?
4. தாய் பிள்ளைகளைத்தேற்றுகிறாள். Tây piḷḷeigaḷei têttugirrâḷ.	The mother comforts the children.
5. என் பாடத்தைச் செம்மையாய் எழுதினேன். En pâḍattei çemmeiyây eṛudinên.	I have written my lesson correctly.
6. அவன் என்னிடத்தில் பேசினான்.... Avan enniḍattil pêçinân.	He spoke with me.
7. தண்ணீரைத் தேடுகிறார்கள்...... Taṇṇîrei têḍugirrârgaḷ.	They are seeking water.
8. இப்பொழுது தூங்கவேண்டுமோ? Ippoṛudu tûnga vêṇḍumô?	Must you sleep now? [No.]
9. அவள் சோறு ஆக்கினாள்........ Avaḷ çôrru âkkinâḷ. (She made rice: she converted அரிசி into சோறு).	She boiled rice.
10. ஒரு வீடு [or வீட்டை] கட்டினான். Oru vîḍu [vîṭṭei] kaṭṭinân.	He built a house.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. We must build a new house..	நாம் புதுவீடு கட்டவேண்டும். Nâm puđu vîḍu kaṭṭa vêṇḍum.
2. Tie the cow there	பசு அங்கே கட்டு. Paçu anggê kaṭṭu.
3. Who tied the bullock ?	மாட்டை ஆர் கட்டினது? Mâṭṭei âr kaṭṭinađu ?
4. Where did he write the book ?	அந்தப் புஸ்தகத்தை எங்கே எழுதினான்? Anđa pustagattei enggê eṛuđinân?
5. The *Munshi* wrote it...........	அதை முன்ஷி எழுதினார். Ađei munshi eṛuđinâr.
6. He seeks a physician.	வைத்தியனைத் தேடுகிறார். Veittiyanei têḍugirrâr.
7. Who made this?	இது ஆர் பண்ணினது? Iđu âr paṇṇinađu ?
8. Who did this ?..................	இது ஆர் செய்தது? Iđu âr çeyđađu ?
9. Show the house to the watchman.	காவற்காரனுக்கு வீட்டைக் காட்டு. Kâval-kâranukku vîṭṭei kâṭṭu.
10. You must comfort your good mother.	நீ நல்ல தாயைத் தேற்றவேண்டும். Nî nalla tâyei têtta vêṇḍum.
11. Did she seek the little boy ? ..	அவள் சின்னப் பையனைத் தேடினாளோ? Avaḷ çinna peiyanei têḍinâḷô ?
12. What do they seek here ?......	அவர்கள் இங்கே என்னத்தைத் தேடுகிறார்கள்? Avargaḷ inggê ennattei têḍugirrârgaḷ ?
13. We will write clearly to the *Munshi*.	நாம் முன்ஷிக்குத் தெளிவாய்எழுதுவோம். Nâm munshikku teḷivây eṛuđuvôm.
14. Has the mother boil'd the rice?	தாய் சோறு ஆக்கினாளா? Tây çôrru âkkinâḷâ ?
15. Did he seek the cow, or did he go to sleep in the house?	பசுவைத் தேடினானா, வீட்டில் தூங்கினானா? Paçuvei têḍinânâ ? vîṭṭil tûnginânâ ?

EXERCISE 19.

ENGLISH.	TAMIL.
65. *(a.)*	
1. I saw (looked at) him in the house.	இவனை|வீட்டிலே|பார்த்தேன். Ivanei vîṭṭilê pârttên.
2. I shall see him then	நான் அவனை அப்போது பார்ப்பேன். Nân avanei appôđu pârppên.
3. Did you see it ?	நீ அதைப் பார்த்தாயா? Nî ađei pârttâyâ ?
4. We must preserve the children.	நாம் பிள்ளைகளை இரட்சிக்கவேண்டும். Nâm piḷḷeigaḷei iraḍchikka vêṇḍum.
5. God forgives our sins	பராபரன் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். Parâbaran nammuḍeiya pâvanggaḷei mannikkirrâr.
6. Forgive us our sins..............	எங்கள் பாவங்களை மன்னியும். Enggaḷ pâvanggaḷei manniyum.
7. Deliver us from evil	தீமையினின்று இரட்சிக்கவேண்டும். Tîmeiyinninrru iradchikka vêṇḍum.
8. This [is] evil.......................	இது தீமை. Iđu tîmei.
9. We must not do evil...........	நாம் தீமை செய்யவேண்டாம். Nâm tîmei çeyya vêṇḍâm.
10. He will bathe in the house....	இவன் வீட்டிலே குளிப்பான். Ivan vîṭṭilê kuḷippân.
11. He took care of the house	அவன் வீட்டை[க்] காத்தான். Avan vîṭṭei kâttân.
12. Pay the money now to the accountant.	கணக்கனுக்கு இப்போ பணஞ்செலுத்து. Kaṇakanukku ippô paṇam çeluttu.
13. He has done evil for money ..	இவன் பணத்துக்காகத் தீமைசெய்தான். Ivan paṇattukkâga tîmei çeydân.

TAMIL.	ENGLISH
(b.)	
1. தாய் பிள்ளையைக் காக்கிறாள்.... Tây piḷḷeiyei kâkkirrâḷ.	The mother takes care of the child.
2. நாய் வீட்டைக் காக்கிறது....... Nây vîṭṭei kâkkirradu.	The dog guards the house.
3. அந்தப் பையன் புதுப் பாடத்தைப்பார்த்தான். Anda peiyan pudu pâḍattei pârt-tân.	That boy looked at [his] new lesson.
4. கணக்கன் மன்னிப்பானா?...... Kaṇakkan mannippânâ ?	Will the accountant forgive?
5. பிள்ளைகள் வீட்டிலே குளிக்கிறார்களா? Piḷḷeigaḷ vîṭṭilê kuḷikkirrârgaḷâ ?	Are the children bathing in the house?
6. பிதாவே! எனக்கு மன்னிக்க வேண்டும். Pidavê ! enakku mannikka vêṇ-ḍum.	Father! pray forgive (me.)
7. காலத்தைக் கழித்தான்............ Kâlattei kaṛittân.	He spent [his] time.
8. காலம் கழிகிறது.................... Kâlam kaṛigirradu.	The time has passed away.
9. எனக்கு அந்த அரிசியைக் காட்டு.... Enakku anda ariçiyei kâṭṭu.	Show me that raw rice.
10. அது தீமையா அல்லவா? சொல்லு. Adu tîmeiyâ, allavâ ? çollu.	Tell me is that evil? or is it right?
11. ஊரார் என்னிடத்தில் பேசுவார்களா, எழுதுவார்களா? Ûrâr ennidattil pêçuvârgaḷâ, eṛu-duvârgaḷâ ?	Will the villagers speak with me or write?

EXERCISE 20.

ENGLISH.	TAMIL.
67. *(a.)*	
1. Open the door......................	கதவு திற. Kađava tirra !
2. They crossed over the river..	ஆற்றைக் கடந்தார்கள். Âttei kaḍanđârgaḷ.
3. She mingled water with the milk.	பாலோடு தண்ணீரைக் கலந்தாள். Pâlôdu taṇṇîrei kalanđâḷ.
4. The little boy forgot the old lesson.	சின்னப்பையன் பழைய பாடத்தை மறந்தான். Çinna peiyan paṛeiya pâḍattei marran-đân.
5. I forgot the book................	நான் புஸ்தகத்தை மறந்தேன். Nân pustagattei marranđên.
6. You must not walk so..........	அப்படி நடக்கவேண்டாம். Appaḍi naḍakka vêṇḍâm.
7. In that, water and milk are mingled.	அதில் தண்ணீரும் பாலும் கலந்தது. Ađil taṇṇîrum pâlum kalanđađu.
8. The accountant walked with the watchman.	கணக்கன் காவற்காரனோடு நடந்தான். Kaṇakkan kâval-kâranôḍu naḍanđân.
9. The bird flies there..............	குருவி அங்கே பறக்கிறது. Kuruvi anggê parrakkirrađu.
10. She looked at the little bird..	அவள் குருவியைப் பார்த்தாள். Avaḷ kuruviyei pârttâḷ.
11. A child is born....................	பிள்ளை பிறந்தது. Piḷḷei pirranđađu.
12. The servant died then............	வேலைக்காரன் அப்போ இறந்தான். Vêlei-kâran appô irranđân.

TAMIL.	ENGLISH.
(*b.*)	
1. கதவைத் திறக்கவேண்டாம்.... Kađavei ..rakka vêṇḍâm.	You must not open the door.
2. வேலைக்காரன் என்னத்திற்காகக் கதவைத் திறக்கிறான். Vêlei-kâran ennattirkâga kađavei tirrakkirrân.	Why does the servant open the door?
3. ஆர் ஆற்றைக் கடப்பார்கள்?.... Âr âttei kaḍappârgaḷ.	Who will cross the river?
4. நீ எப்படி அந்தவீட்டைத் திறந்தாய்? Nî êppaḍi anđa vîṭṭei tirranđây?	How did you open that house?
5. பையனே! நீ இதை மறக்கவேண்டாம். Peiyanê! nî iđei marrakka vêṇḍâm.	[My] boy! do not forget this.
6. பிள்ளை பிறந்ததா?................ Piḷḷei pirranđadâ?	Is [the] child born?
7. அந்த வீட்டிலே ஆர் இறந்தது? Anđa vîṭṭilê âr irranđađu?	Who is dead in that house?
8. அப்படி நடந்தது................... Appaḍi nâḍandadu.	It so happened (Lit. walked).
9. நல்ல மனிதன் அப்படி நடப்பானா? Nalla manidan appaḍi naḍappânâ?	Will a good man, thus conduct himself?

EXERCISE 21.

TAMIL.	ENGLISH.
69. (*a.*)	
1. என்னை அப்பொழுது காட்டிலே விட்டான். Ennei appoṛuđu kâṭṭilê viṭṭân.	He left me then in the jungle.
2 என்னை நீர் விடவேண்டாம்.... Ennei nîr viḍa vêṇḍâm.	You must not leave me.
3. வேலைக்காரருக்குச் சோறுபோட்டார்களா? Vêlei-kârarukku çôṛṛu pôṭṭâr-gaḷa?	Did they serve out rice to the servants also?
4. இப்படிக் கட்டளை இட்டார்... Ippaḍi kaṭṭaḷei iṭṭâr.	He commanded this.
5. எனக்கு இதைக் கட்டளை இடவேண்டும். Enakku iđei kaṭṭaḷei iḍa vêṇḍum.	[You] must grant me this.
6. ஊரார் நாற்று நடுகிறார்கள்...... Ûrâr nâttu naḍugirrârgaḷ.	The villagers are transplanting the young plants.
7. அவள் எனக்குச் சோறு இட்டாள். Avaḷ enakku çôṛṛu iṭṭâḷ.	She served out rice to me.
8. காவற்காரன் என் வீட்டுக்கு உள் [வீட்டுக்குள்] புகுந்தான். Kâval-kâran en vîṭṭukk'uḷ pu-gunđân.	The watchman came into my house.
9. பிள்ளைபெற்றாள்.................. Piḷḷei pettâḷ.	She bore a child.
10. மூன்று பிள்ளைகளைப் பெற்றான். Mûnru piḷḷeigaḷei pettân.	He begat three sons.
11. ஆற்றிலே போட்டான்.......... Âttilê pôṭṭân.	He put [it] in the river.
12. மாட்டுக்குப் போட்டானோ, நாய்க்குப் போட்டானோ? Mâṭṭukku pôṭṭânô, nâykku pôṭ-ṭânô?	Did he give it (put it) to the bullock or to the dog?
13. இதிலே தலை இட்டானோ?....... Iđilê talei iṭṭânâ?	Did he meddle in this?
14. அந்த வேலைக்குப் போகவேண்டாம். Anđa vêleikku pôga vêṇḍâm.	Don't go to that work.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. What shall I give you?	உனக்கு என்னத்தைக் கொடுப்பேன்? Unakku ennattei koḍuppên?
2. Why do they plant that tree there?	அந்த மரத்தை ஏன் அங்கே நடுகிறூர்கள்? Anda marattei ên anggê naḍugirrârgaḷ?
3. Why did the villagers leave the village?	ஊரார் ஏன் அந்த ஊரை விட்டார்கள்? Ûrâr ên anda ûrei viṭṭâ-—aḷ?
4. Who suffered?	எவன் (பாடு) பட்டான்? Evan (pâḍu) paṭṭân?
5. What did you obtain by this sin?	இந்தப் பாவத்தினுல் என்னத்தை அடைந்தாய்? Inda pâvattinâl ennattei aḍeindây?
6. He went into the jungle [4th case with உள்.]	காட்டுக்குள் போனுன். Kâṭṭukkuḷ pônân.
7. Where did he plant?	எங்கே நட்டான்? Enggê naṭṭân?
8. Serve out the rice..............	சோறிடு. [சோறுபோடு] (put rice). Çôrr'iḍu (çôrru pôḍu.)
9. Did he put it on his head, or on his foot.	தலையில் போட்டானு, காலில் போட்டானு? Taleiyil pôṭṭânâ, kâlil pôṭṭânâ?
10. Don't meddle in that business.	அதில் (அந்த வேலையில்) தலை இட வேண்டாம். Adil (anda veleiyil) talei iḍa vêṇḍâm.

EXERCISE 22.

TAMIL.	ENGLISH.
71. *(a.)*	
1. நான் இந்த ஊர்க்கணக்கன், என்றான். Nân inđa ûr-kaṇakkan enrân.	He said, "I am this village accountant."
2. நீர் அவனை வெல்லவேண்டும். Nîr avanei vella vêṇḍum.	You must conquer him.
3. ஊரார் எங்கே நிற்கிறார்கள்?... Ûrâr enggê nirkirrârgaḷ ?	Where are the villagers standing?
4. உனக்கு ஆர் அப்படிச் சொன்னார்கள்? Unakku âr appaḍi çonnârgaḷ ?	Who told you so?
5. தாயே! அப்படிச் சொல்ல வேண்டாம். Tâyê ! appaḍi çolla vêṇḍâm.	Mother! do not say so.
6. இப்பொழுது தருவேன் என்றான். Ippoṛuđu taruvên enrân.	He said "I will give it once."
7. என் பசுவைக் காட்டிலே கண்டீரோ? En paçuvei kâṭṭilê kaṇḍîrô ?	Have you seen my cow in the jungle?
8. பராபரனுடைய கட்டளைகளைக் கேட்டார்கள். Parâbaranuḍeiya kaṭṭaḷeigaḷei kêṭṭârgaḷ.	They heard the commandments of God.
9. தாயும் பிள்ளையும் ஊராரும் இப்போ வருவார்கள். Tâyum piḷḷeiyum, ûrârum ippô varuvârgaḷ.	The mother, the child, and the villagers will come now.
10. நீங்கள் என்னத்தை அவனிடத்திலே கேட்கிறீர்கள்? Ningaḷ ennattei avaniḍattilê keḍkirrîrgaḷ ?	What are you asking from him?
11. வர்த்தகனிடத்தில் என்ன வாங்கினாய்? Varttaganiḍattil enna vângginây?	What did you buy of the merchant?
12. உப்பு வாங்கவில்லையா? Uppu vângavilleiyâ ?	Did [you] not buy salt?

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Who comes there?.............	ஆர் அங்கே வருகிறது? Âr anggê varâgirradu?
2. Who gave you this?...........	இதை உனக்கு எவன் கொடுத்தான்? Idei unakku evan koḍuttân?
3. Don't say that lesson.........	அந்தபாடத்தைசொல்லவேண்டாம். Anda pâḍattei çolla vêṇḍâm.
4. The servant must stop here...	வேலைக்காரர் இங்கே நிற்கவேண்டும். Vêlei-kârar inggê nirka vêṇḍum. .
5. We will go into the house with the watchman.	நாம் காவற்காரனோடு வீட்டிலே போவோம். Nâm kâval-kâranôḍu vîṭṭilê pôvôm.
6. The son conquered the villagers.	குமாரன் ஊராரை வென்றான். Kumâran ûrârei vendrân.
7. Who made this?................	இதை எவன் பண்ணினான்? Idei evan paṇṇinân?
8. Who did this?..................	இதை எவன் செய்தான்? Idei evan çeydân?
9. Who created this?.............	இதை ஆர் படைத்தார்? Idei âr paḍeittâr?
10. Where did he buy the rice?...	இவன் எங்கே அரிசி வாங்கினான்? Ivan enggê ariçi vângginân?
11. What did you hear in the village?	நீ ஊரிலே என்னத்தை கேட்டாய்? Nî ûrilê ennattei kêttây?
12. Did you see the good doctor in the house?	வீட்டிலே நல்ல வைத்தியனைக் கண்டீரா? Vîṭṭilê nalla veittiyanei kaṇḍîrâ?
13. What lesson has the little boy learnt with the *munshi*?	சின்னபையன் முன்ஷியினிடத்தில்என்னபாடம் படித்தான்? (கற்றான்). Çinna peiyan munshiyinidattil enna pâḍam paḍittân? (kattân.)

EXERCISE 23.

ENGLISH.	TAMIL.
73. *(a.)*	
1. What shall I do?...............	நான் என்ன செய்வேன்? [The Latin Subj. of appeal.] *Quid faciam?* Nân enna çeyvên?
2. What will the child learn?.....	பிள்ளை என்ன படிக்கும்? Piḷḷei enna paḍikkum?
3. The cow will come now........	பசு இப்போ வரும். Paçu ippô varum.
4. Do you know that letter?......	அந்த எழுத்து உனக்குத் தெரியுமா? Anda eṛuttu unâkkû teriyumâ?
5. It will happen (Tam. It will walk so, நட).	அப்படி நடக்கும். Appaḍi naḍakkum.
6. The command will come to the villagers.	ஊராருக்குக் கட்டளை இப்போ வரும். Ûrârukku kaṭṭaḷei ippô varum.
7. Who must go to the *Munshi*.	முனிஷியினிடத்தில் யார் போகவேண்டும்? Munshiyiniḍattil yâr pôga vêṇḍum?
8. When will the tree grow?......	மரம் எப்போ வளரும்? Maram eppô vaḷarum?
9. Where can the book be (Tam. where will it be)?	புத்தகம் எங்கே இருக்கும்? puttagam enggê irukkum?
10. Will the house fall? no it will stand.	வீடு விழுமா? இல்லை, நிற்கும். Viḍu viṛumâ? illei, nirrkum.
11. Will the village perish?........	ஊர் அழியுமா? Ûr aṛiyumâ?
12 Will that house suit you?......	அந்த வீடு உங்களுக்கு ஆகுமா? Anda viḍu unggaḷukku âgumâ?
13. Will the child weep for its mother?	பிள்ளை தாய்க்காக அழுமா? Piḷḷei tâykkâga aṛumâ?

Compare III Gram. 81, for all the forms of the future, and for examples. Also 149 for idiomatic use of future for other tenses.

TAMIL.	ENGLISH.
(b.)	
1. அந்த மாடு என்ன செய்யும்? Anda mâḍu enna çeyyum?	What will that bullock do?
2. அது எப்படி ஆகும்? Adu eppaḍi âgum?	How can that be?
3. மரம் ஊரிலே இருக்குமா? இல்லை, காட்டிலே இருக்கும். Maram ûrilê irukkumâ? illei, kâṭṭilê irukkum.	Will the tree be in the village? no; it will be in the jungle.
4. பாவம் தீருமா? Pâvam tîrumâ?	Can sin be expiated?
5. மாடுகளும் ஆடுகளும் இப்போ அந்தக் காட்டிலே மேயும். Mâḍugaḷum âḍugaḷum ippô anda kâṭṭilê mêyyum.	Oxen and sheep will now graze in that jungle.
6. பிள்ளை தவழுமா? நடக்குமா? Piḷḷei tavaṛumâ, naḍakkumâ?	Will the child crawl or walk?
7. குருவி பேசுமா? இல்லை, பறக்கும். Kuruvi pêçumâ? illei, parrakkum.	Will a little bird speak? no, it will fly.
8. "நீரில் எழுத்தாகும் யாக்கை" (This is poetical.) Nîril eṛutt'âgum yâkkei.	The body will become like writing on water.
9. இது முகத்துக்கு ஆம். Idu mugattukku âm.	This will do for the face.
10. அந்த வியாதி போகச் சொன்னால், போமா? Anda viyâdi pôga çonnâl pômâ?	Will that disease go when you bid it? [Comp. H. B. 95.]
11. "சூதும் வாதும் வேதனை செய்யும்." Çûdum vâdum vêdanei çeyyum.	Gaming and disputing cause anguish.
12. இப்படிச் செய்யப் போமா? Ippaḍi çeyya pôma?	Is it right to do so?
13. பசுமாடு கேட்குமா? Paçu-mâḍu kêṭkumâ?	Will a cow hear.

EXERCISE 24.

TAMIL.	ENGLISH.
75. (*a.*)	
1. நான் படித்த பாடம்............... Nân paḍitta pâdam.	The lesson which I learnt.
2. வீட்டிலே இருக்கிற பிள்ளை அழுகிறது. Vîṭṭilê irukkirra piḷḷei aṛugirradu.	The child in the house cries.
3. பிள்ளை வீட்டில் அழுகிறது......... Piḷḷei vîṭṭil aṛugirradu.	The child is crying in the house.
4. வீட்டில் அழுகிற பிள்ளை............ Vîṭṭil aṛugirra piḷḷei.	The child that cries in the house.
5. ஊரில் இருக்கும் வைத்தியன்...... Ûril irukkum veittiyan.	The doctor who will be in the house.
6. இப்பொழுது வந்த வேலைக்காரன்.... Ippoṛudu vanda vêlei-kâran.	The servant who has just come.
7. ஊரார் நட்ட மரங்கள்.............. Ûrâr naṭṭa maranggaḷ.	The trees which the villagers planted.
8. தேவன் இட்ட கட்டளை............ Dêvan iṭṭa kaṭṭaḷei.	The command given by God.
9. அவர்கள் எனக்காகத் திறந்த கதவு. Avargaḷ enakkâga tirranda kadavu.	The door which they opened for me.
10. என் பிதா கடந்த ஆறு.............. En pidâ kaḍanda ârru.	The river which my father crossed.
11. எங்களைக் காத்த பராபரன்........ Enggaḷei kâtta Parâbaran.	God who has protected us.
12. மனிதரை இரட்சிக்கும் தேவன்.... Manidarei iraḍçikkum dêvan.	The God who will save men.
13. பிள்ளைகள் குளிக்கிற தண்ணீரைக் கொண்டுவா. Piḷḷeigaḷ kuḷikkirra taṇṇîrei koṇḍu-vâ.	Bring the children's bathing water.
14. நான் செய்த பாவங்களை நீர் மன்னிக்க வேண்டும். Nân çeyda pâvanggaḷei nîr mannikka vêṇḍum.	Pray forgive the sins which I have done.
15. நான் போகிற வீட்டுக்கு நீ வர வேண்டாம். Nân pogirra vîṭṭukku nî vara veṇḍâm.	You must not come to the house where I'm going.
16. நான் எழுதின பாடத்தை முனிஷி பார்க்க வேண்டும். Nân eṛudina pâḍattei munshi pârkka vêṇḍum.	The *Munshî* must look at the lesson I have written.
17. நான் சொல்லும் பொழுது உனக்குத் தெரியவரும். Nân çollum poṛudu unakku teriya varum.	When I tell [you] you will understand.

N. B. Here the learner should also compare 3rd Grammar 143, where specimens of each idiom connected with the *relative participle* are given.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. The books which the boy sought.	பையன் தேடின புஸ்[த்] தகங்கள். Peiyan têḍina pustagangga].
2. The daughter whom the mother comforted.	தாய் தேற்றின மகள். Tây têttina magaḷ. } Note these two.
3. The daughter who comforted the mother.	தாயைத் தேற்றின மகள். Tâyei têttina magaḷ. } Note these two.
4. The trees which grew in that jungle.	அந்தக் காட்டிலே வளர்ந்த மரங்கள். Anda kâṭṭilê vaḷarnda maranggaḷ.
5. The garments which the son put on.	மகன் உடுத்தின வஸ்திரங்கள். Magan uḍuttina vastiranggaḷ.
6. The son who put on garments.	வஸ்திரங்களை உடுத்தின மகன். Vastiranggalei uḍuttina magan.
7. The rain which will fall here.	இங்கே பெய்யும் மழை. Inggê peyyum maṛei. } Note these two.
8. It will rain here..................	இங்கே மழை பெய்யும். Inggê maṛei peyyum. } Note these two.
9. The leg which pained me......	எனக்கு நொந்த கால். Enakku nonda kâl.
10. The boy who went to the village died there.	ஊருக்குப் போன பையன் அங்கே இறந்தான். Ûrukku pôna peiyan anggê irrandân.
11. The (woman's) cloth which he wove.	இவன் நெய்த புடவை. Ivan neyda pudavei.
12. The table which they made....	அவர்கள் பண்ணின மேசை. Avargaḷ paṇṇina mêçei.
13. Beat the dog which bite the little children.	சின்னப் பிள்ளைகளைக் கடிக்கிற நாயை அடி. Çinna piḷḷeigaḷei kaḍikkirra nâyei aḍi.
14. Where is the rice I saw in the house?	நான் வீட்டிலே கண்ட அரிசி எங்கே? Nân vîṭṭilê kaṇḍa ariçi enggê?

Tamil words are divided into பகு-பதம் and பகாப்-பதம்.
See III Gram. 122. 123. This should be now studied with a Munshi.

A word (பதம்) which cannot in Tamil be resolved into simpler elements is a பகாப்பதம் or *root*.

A word which can be divided is a பகுபதம்.

The elements of the பகுபதம் are

(1.) பகுதி, the *root* or பகாப்பதம்.
(2.) விகுதி, significant termination or *inflexional particle*.
(3.) இடைநிலை, significant middle particle, chiefly temporal.
(4.) சாரியை, euphonic increment.
(5.) விகாரம், transformation.

EXERCISE 25.

TAMIL.	ENGLISH.
78. (*a.*)	
1. தீமையை நீக்கி, எங்களை இரட்சியும். Tîmeiyei nîkki enggaḷei iraḍçi-yum.	Deliver us from evil. [Save us, having removed evil.]
2. இந்தப் பாடத்தைப் படித்து அறிய வேண்டும். Inđa pâḍattei paḍitt'arriya vêṇ-ḍum.	We must *learn and,* know this lesson.
3. காவற்காரன் நம்முடைய வேலைக்காரனை வைது அடித்தான். Kâval-kâran nammuḍeiya vêlei-kâranei veiđu aḍittân.	The watchman *abused, and* beat our servant.
4. எவன் உம்மைக் கண்டு பேசினான்? Evan ummei kaṇḍu pêçinân?	Who *saw* you *and* spake with you?
5. எந்தப் பாடத்தைப் படித்து எழுதினீர்? Enđa pâḍattei paḍittu eṛuđinîr?	What lesson did you *learn and* write?
6. ஊரார் அடங்கிப் (=submissively) பேசினார்கள். Urâr aḍanggi pêçinârgaḷ.	The villagers spoke *submissively.*
7. இதைத் தெளிவாய் உச்சரித்துச் சொல்லவேண்டும். Iđei teḷivây uççarittu çolla vêṇ-ḍum.	You must pronounce this *clearly.*
8. ஊருக்குப் போய்ப் பார்க்கவேண்டும். Ûrukku pôy pârkka vêṇḍum.	You must *go* to the village *and* see.
9. பையன் தேடின புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு வா. Peiyan têdina pustaganggaḷei eḍuttu koṇḍu-vâ.	*Bring* the books which the boy was looking for.
10. எந்த வீட்டிலே தேடிவந்தாய்? Enđa vîṭṭilê têḍi vanđây?	What house have you been seeking [it] in.
11. என்னுடைய வேலைக்காரர் இற Ennuḍeiya vêlei-kârar irrandu- ந்துபோனார்கள்(செத்துப்போனார்கள்.) pônârgaḷ (çettu-pônârgaḷ.)	My servants are dead.

Comp. III Gram. 120.

ENGLISH.	TAMIL.
(*b.*)	
1. They *came and* spoke with him.	அவர்கள் வந்து அவனிடத்தில் பேசினார்கள். Avargaḷ vandu avanidattil pêçinârgaḷ.
2. The dog *bit and* killed the bird.	நாய் குருவியைக் கடித்துக் கொன்றுபோட்டது. Nây kuruviyei kaḍittu konrru-pôṭṭadu.
3. She *entered* the house *and* saw the mother.	அவள் வீட்டிற்குள் புகுந்து தாயைக் கண்டாள். Avaḷ vîṭṭirrkuḷ pugundu tâyei kaṇḍâḷ.
4. He *obtained* money *and* gave to the villagers.	அவன் பணத்தை வாங்கி, ஊராருக்குக் கொடுத்தான். Avan paṇattei vânggi, ûrarukku koduttân.
5. We must *plough and* plant trees.	நாம் உழுது மரங்களை நட வேண்டும். Nâm uṛudu maranggaḷei naḍa vêṇḍum.
6. The little boy *lay down, and* slept in the jungle.	சின்னப்பையன் காட்டிலே படுத்துத் தூங்கினான். Çinna peiyan kâṭṭilê paḍuttu tûngginân.
7. The mother sought the child *weeping.*	தாய் அழுது பிள்ளையைத் தேடினாள். Tây aṛudu piḷḷeiyei têḍinâḷ.
8. Which servants died in the jungle?	எந்த வேலைக்காரர் காட்டிலே இறந்தார்கள்? Enda vêlei-kârar kâṭṭilê irrandârgaḷ?
9. Which are the books that the boy was seeking in the jungle?	பையன் வீட்டிலே தேடின புஸ்தகங்கள் எவை? Peiyan vîṭṭilê têḍina pustaganggaḷ evei?

In analysis this *participle* may sometimes be treated as a secondary predicate, at other times as an enlargement of the predicate, or of some other member of the sentence; thus,

அந்த நரிக்குச் செத்த யானையைக் கண்டு, அதன் தோலைக் கிழித்து, இறைச்சி தின்னும் வல்லமை இல்லை

எழுவாய்.	எழுவாய் உரிச்சொல்.	பயனிலை.	
வல்லமை	செத்த யானையைக் கண்டு, அதின் தோலைக் கிழித்து, இறைச்சி தின்னும்	இல்லை	அந்த நரிக்கு.
ஏது?	எவ்விதமானது?	என்ன கருத்து.	யாருக்கு?

Or, the strength which [having seen the dead elephant, having torn its skin] will eat the flesh is not to that fox. III Gram. 143.

Here the adv. participle கண்டு, கிழித்து are enlargements of the *relative participle* தின்னும்=*which will eat.* When ? after (the fox) has seen, &c., and *has torn, &c.*

EXERCISE. 26.

TAMIL.	ENGLISH.
81. *(a.)*	
1. ஆர் வீட்டிலே வந்திருக்கிறார்கள்? Âr vîṭṭilê vanđ'irukkirrârgaḷ?	Who *are* come into the house? [This is the perfect tense.]
2. முன்ஷி அப்படிச் சொல்லி இருந்தார். Munshi appaḍi çolli-irunđâr.	The munshî *had told* (us) so.
3. அந்தப் பையன் படித்த பாடங்களை இப்பொழுது மறந்திருக்கிறான். Anđa peiyan paḍitta pâdanggaḷei ippoŗuđu marranđ'irukkirrân.	That boy *has* now *forgotten* the lessons he learnt.
4. கணக்கன் பணத்தை எனக்குக் கொடுத்திருந்தான். Kaṇakkan paṇattei enakku koḍutt'irunđân.	The accountant *had given* me the money.
5. நான் செய்திருக்கும் பாவங்களை மன்னியும். Nân çeyđ'irukkum pâvanggaḷei manniyum.	Forgive the sins, which I (may) *have committed.*
6. வேலைக்காரர் கட்டியிருந்த வீடு விழுந்தது. Vêlei-kârar kaṭṭi-irunđa vîḍu viŗunđađu.	The house which the servants *had built* fell down.
7. நல்லவனாய் இருக்கிறான்........ Nallavanây irrukkirrân.	He is a good person.
8. எங்கே போய் இருக்கிறான்?.... Enggê pôy irukkirrân?	Where *is* he *gone?* (perf. tense.)
9. இதை பார்த்திருக்கிறாயா ஊரார் உனக்குச் சொல்லி இருக்கிறார்களா? Iđei pârtt'irrukkirrâyâ, ûrâr unakku çolli-irukkirrârgaḷâ?	Hast thou seen this, or have the villagers told you?
10. அதை அவன் பார்க்கவில்லை, ஊராரால் கேட்டிருந்தான். Ađei avan pârkka-villei, ûrâral kêṭṭ'irunđân.	He did not see it (but) he had heard it from the villagers. (Lit. by the villagers.)

Comp. III Gram. 124.

ENGLISH.	TAMIL.
(*b.*)	
1. I *have written* the lesson........	பாடத்தை எழுதி இருக்கிறேன். Pâḍattei eṛudi irukkirrên.
2. You *had sought* the child in the jungle.	நீ காட்டிலே அந்தப் பிள்ளை தேடி இருந்தாய். Nî kâṭṭilê anda piḷḷei têḍi irundây.
3. The door which he *had opened* for the little boy.	இவன் சின்ன பையனுக்குத் திறந்திருந்த கதவு. Ivan çinna peiyanukku tirrand'irunda kadavu.
4. The villager who *had planted* the tree came.	மரத்தை நட்டிருந்த ஊரான் வந்தான். Marattei naṭṭ'irunda ûrân vandân.
5. The tree which the villager *had planted* grew.	ஊரான் நட்டிருந்த மரம் வளர்ந்தது. Ûrân naṭṭ'irunda maram vaḷarndadu.
6. *I have forgotten*, and forgiven the evils he has done to me.	இவன் எனக்குச் செய்த தீமைகளை நான் மன்னித்து மறந்துவிட்டிருக்கிறேன். Ivan enakku çeyda tîmeigaḷei nân mannittu marrandu viṭṭ'irukkirrên.
7. The milk was mingled with water.	பால் தண்ணீரோடு கலந்திருந்தது. Pâl taṇṇîrôḍu kaland'irundadu.
8. The bird drank the milk mingled with water.	குருவி தண்ணீர்கலந்த பாலைக் குடித்தது. Kuruvi taṇṇîr kalanda pâlei kuḍittadu.

EXERCISE 27.

TAMIL.	ENGLISH.
86. *(a.)*	
1. *அவர்கள் வீட்டைக்கட்டும் முன்னமே மழை பெய்தது.* Avargaḷ vîṭṭei kaṭṭum munnamê maṛei peyđadu.	It rained before they had built the house.
2. *நாம் பிள்ளையைத்தேடினபிற்பாடு கணக்கனுடைய வீட்டில் இருக்கிறது என்று காவற்காரன் வந்து சொன்னான்.* Nâm piḷḷeiyei têḍina pirrpâḍu kaṇakkanuḍeiya vîṭṭil irukkirrađu enrru kâval-kâran vanđu çonnân.	After we had sought the child, the watchman came and said, it was in the accountants house.
3. *[கன்றை]ஈன்ற பசு இதோ இருக்கிறது என்று சொன்னான்.* [Kanrrei] înrra paçu, idô irukkirrađu enrru çonnân.	He said see, there is the cow that bore a calf.
4. *இவள் பிள்ளையைப்பெற்றதாயோ என்று கேட்டார்.* Ivaḷ piḷḷeiyei petta tâyô enrru kêṭṭâr.	He asked if this were the mother of the child.
5. *அந்த நாயை அடிக்கவேண்டாம் என்று கட்டளை கொடுத்தேன்.* Anđa nâyei aḍikka vêṇḍâm enrru kaṭṭaḷei koḍuttên.	I gave you an order not to beat the dog.
6. *காவற்காரனுக்குப் பின் ஊரார் வந்தார்கள்.* Kâval-kâranukku pin ûrâr vanđârgaḷ.	The villagers came after the watchman.
7. *அதற்குப்பின் பத்து பாரம் வந்தது* Ađarku pin pattu bâram vanđadu.	After that ten loads came.
8. *பின்னென்ன? முன்னே போகச் சொன்னேன் அல்லவா?* Pin enna? munnê pôga-çonnên, allavâ?	What else? I told you to go before. Did I not?
9. *ஏன் பின்னே வந்தாய்?* Ên pinnê vanđây?	Why did you come behind?
10. *இவன் என்றும் அவன் என்றும் எனக்குத் தெரியவில்லை.* Ivan enrrum, avan enrrum, enakku teriya-villei.	I do not know whether it is this man, or that man.

The sentences with என்று are in English generally *Objective noun sentences.* The quotation is direct. Comp. 3rd Gram. 114. 144.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Before you sleep	நீ தூங்கும் முன்னே. Nî tûngum munnê.
2. Before the villagers ploughed, it rained.	ஊரார் உழும் முன்னே மழை பெய்தது. Ûrâr uṛum munnê maṛei peyḍaḍu.
3. Think well before you do this.	இதைச் செய்யும்முன் நன்றாய் நினைக்கவேண்டும். Iḍei çeyyum mun nanrrây nineikka vênḍum.
4. His head ached after he ate that fruit.	அந்தப் பழத்தைப் பொசித்தபிற்பாடு அவனுக்குத் தலைநொந்தது. Anḍa paṛattei poçitta pirpâḍu avanukku talei nonḍaḍu.
5. You read your lesson well after he went home.	அவன் வீட்டுக்குப் போனபிறகு நீ பாடத்தைச் செம்மையாய் படித்தாய். Avan vîṭṭukku pôna pirragu nî pâḍattei çemmeiyây paḍittây.
6. Where is the boy who read his lesson well?	நன்றாய்ப் பாடம் வாசித்த பையன் எங்கே? Nanrrây pâḍam vâçitta peiyan enggê?
7. After this what will you do?	இதற்குப்பின் என்ன செய்வாய்? Iḍarku pin enna ceyvây?
8. Before I came should you not have wiped the table?	நான் வரும் முன்னே நீ மேசை துடைக்கவேண்டாமா? Nân varum munnê nî mêçei tuḍeikka vênḍâmâ?
9. Rub down the bandy-bullock after it has come from the jungle.	பண்டிமாடு காட்டிலிருந்து வந்தபிறகு நன்றாய்த் தேய். Banḍi-mâḍu kâṭṭilirunḍu vanḍa pirragu nanrrây têy.

EXERCISE 28.

TAMIL.	ENGLISH.
91. *(a.)*	
1. பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்; தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும். Pirrandana irrakkum; irrandana pirrakkum; tônrrina marreyum; marreindana tônrrum.	Things that have been born will die; things that have died will be born; things that have appeared will disappear; things that have disappeared will re-appear.
2. வானத்தையும் பூமியையும் படைத்தவர். Vânatteiyum b'hûmiyeiyum padeittavar.	He who created the heaven and the earth.
3. பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே! Paramaṇḍalanggaḷil irukkirra enggaḷ pidâvê!	Our Father, Which art in heaven!
4. ஆடுகளை மேய்க்கிறவன் மேய்ப்பன். Âḍugaḷei mêykkirravan mêyppan.	He who feeds the sheep is the shepherd.
5. ஊரைக் காக்கிறவன் காவற்காரன். Ûrei kâkkirravan kâval-kâran.	He who guards the village is the watchman.
6. வானத்தில் பறக்கிறது குருவி.... Vânattil parrakkirradu kuruvi.	That which flies in the sky is a bird.
7. இதைச் செய்பவன் எவன்?.... Idei çeybavan evan?	Who is he that will do this?
8. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை. Tikkattavanukku deyvamê tuṇei.	The Divinity is the help of the destitute.
9. நான் வீட்டுக்கு வருவதறிந்து கதவைத் திறக்கவும், மற்றவேளை மூடிவைக்கவும் சொன்னேன். Nân vîṭṭukku varuvad'arrindu, kadavei tirrakkavum, matta vêḷei mûḍi veikkavum çonnên.	I told [her] to open the door when [she] knew I was coming, and at other times to keep it shut.
10. அப்படிச்செய்வது தீமை, நினைப்பதும் தீமை. Appaḍi çeyvadu tîmei, nineippadum tîmei.	It is evil to do so; and evil also to think so.
11. சம்பாதித்ததைக் காப்பாற்றவேண்டும். Çampâdittadei kâppâtta vêṇḍum.	We must take care of what we have earned.
12. காப்பாற்றினதை விர்த்திபண்ணவேண்டும். Kâppâttinadei virtti paṇṇa vêṇḍum.	We must increase what we have guarded.

Comp. III Gram. 95.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Who is it, that gives the money to the little boy?	சின்னப் பையனுக்குப் பணம்கொடுக்கிறதார்? Çinna peiyanukku paṇam koḍukkirrađ'âr?
2. Who struck the watchman?	காவற்காரனை அடித்ததார்? Kâval-kâraṇei ađittađ'âr?
3. This (man) protects me........	இவன் என்னைக் காக்கிறான். Ivan ennei kâkkirrân.
4. This is what I said?	நான் சொன்னது இது. Nân çonnađu iđu.
5. Who did this?	இது ஆர் செய்தது? Iđu âr çeyđađu?
6. How did he do it.....	இதை எப்படிச் செய்தான்? Iđei eppaḍi çeyđân?
7. Are you he that did it?	அதைச் செய்தவன் நீயா? Ađei çeyđavan nîyâ?
8. Art thou he that should come?	வருபவர் நீரா? Varubavar nîrâ?
9. He who has called us [is] God.	எங்களை அழைத்தவர் பராபரன். Enggaḷei aṛeittavar Parâbaran.
10. I sent 10 loads of salt; have you seen them?	நான் பத்துப் பாரம் உப்பு அனுப்பினேன்; பார்த்தீரா? Nân pattu bâram uppu anuppinên; pârttîrâ?
11. It appeared in the heaven, and disappeared.	அது வானத்தில் தோன்றி மறைந்தது. Ađu vânattil tônrri marreinđađu.
12. This is a jungle without water.	இது தண்ணீர் அற்ற காடு. Iđu taṇṇîr atta kâḍu.
13. This is not heavy	இது பாரம் அல்ல. Iđu bâram alla.
14. You must take care of what you have acquired.	நீ சம்பாதித்ததைக் காப்பாற்றவேண்டும். Nî çambâđittađei kâppâtta vêṇḍum.
15. You must increase your wealth and knowledge.	நீ உன்னுடைய கல்வியையும் திரவியத்தையும் விருத்திபண்ணவேண்டும். Nî unnuḍeiya kalviyeiyum dravyattei-yum virutti paṇṇa vêṇḍum.

EXERCISE 29.

TAMIL.	ENGLISH.
94 (a.)	
1. கெட்ட பையன் அடிக்கப்படுவான். Ketta peiyan adikkapaduvân.	A bad boy will be struck.
2. இந்த மேசை தச்சனாலே செய்யப்பட்டது. Inda mêçei taççanâlê çeyya pattadu.	The table was made by a carpenter.
3. இது தச்சன் செய்த மேசை....... Idu taççan çeyda mêçei.	This is the table made by the carpenter.
4. அந்த மேசை தச்சன் செய்தது.... Anda mêçei taççan çeydadu.	That table was made by the carpenter.
5. வெட்டியானையுங் காவற்காரனையுங் கூப்பிட்டுவா. Vettiyâneiyum kâval-kâraneiyum kûppittu vâ.	Call the village scavenger, and the watchman and come.
6. நான் துரைக்கு அர்ஜி எழுதினேன்... Nân dureikku arji erudinên.	I wrote a report to the Gentleman.
7. அந்த மனு சவாப்நவீஸினாலே வாசிக்கப்பட்டது. Anda manu juvâb-navîsinâlê vâçikka-pattadu.	That Memorial was read by the interpreter.
8. என் கடுதாசியைத் தகப்பன் கையில் கொடுத்தேன். En kadudaçiyei tagappan keiyil koduttên.	I gave my paper into my father's hands.
9. இது நன்செயோ, புன்செயோ?...... Idu nançeyô pun-çeyô ? (ç = j.)	Is this dry land or irrigated land ?
10. நன்செய் என்றும் புன்செய் என்றும், மனுவில் எழுதி இருக்கிறான். Nan-çey enrrum pun-çey enrrum manuvil erudi irukkirrân.	In the Memorial he has written (it down) both as dry land, and also as irrigated.
11. உம்மிடத்தில் விண்ணப்பஞ் செய்தேன். Ummidattil vinnappam çeydên.	I have made my petition to you.
12. எழுதுகிறதற்குக் காகிதம் என்னிடத்தில் இல்லை. Erudugirradarku kâgidam ennidattil illei.	I have no paper to write on.
13. உமக்கு அந்த விண்ணப்பத்தில் என் காரியத்தைத் தெரியப்படுத்தினேன். Umakku anda vinnappattil en kâryattei teriya-paduttinên.	I have informed you of all my affair in that petition.
14. ஊராருக்கு விண்ணப்பம் எழுதத் தெரியுமா? Ûrârukku vinnappam eruda teriyumâ ?	Do the villagers know how to write a petition.

Comp. III Gram. 124, and Hand book 262.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Tell the gentleman that Mr. Smith has come.	ஸ்மித்துரை வந்திருக்கிறார் என்று போய்த் தெரியப்படுத்து. *Smith*-durei vand'irrukkirrâr enrru, pôy teriya-paduttu.
2. This is the gentleman's interpreter.	இவர் துரையினுடைய சவாப்நவீஸ். Ivar dureiyinudeiya juvâb-navis.
3. The petition which he wrote is in my hand.	அவன் எழுதின அர்ஜி என் கையில் இருக்கிறது. Avan erudina arji en keiyil irukkinrradu.
4. Have you dry land or irrigated ?	உனக்கு நன்செய் உண்டோ, புன்செய் உண்டோ? Unakku nan-çey undô, pun-çey undô ?
5. I have both dry land, and irrigated land.	எனக்கு நன்செய்யும் உண்டு, புன்செய்யும் உண்டு. Enakku nan-çeyyum undu, pun-çeyyum undu.
6. Tell the gentleman that the person who gave the petition is here.	விண்ணப்பம் கொடுத்தவன் இங்கே இருக்கிறான் என்று துரைக்குச் சொல்லு. Vinnappam koduttavan inggê irukkirrân enrru dureikku çollu.
7. Tell him this is not wet land but dry land.	இது நன்செய் அல்ல புன்செய் என்று சொல்லு. Idu nan-çey alla, pun-çey enrru çollu.
8. Ask him who wrote the petition for him.	இவனுக்காக இந்த விண்ணப்பம் எழுதினது ஆர் என்று கேள். Ivanukkâga inda vinnappam erudinadu âr enrru kêl.
9. Where was this written ?.......	இது எங்கே எழுதப்பட்டது?* Idu enggê eruda-pattadu.
10. By whom was that evil done ?...	அந்தத் தீமை ஆராலே செய்யப்பட்டது? Anda tîmei ârâlê çeyya-pattadu ?
11. By whom is this village governed?	இந்த ஊர் ஆராலே ஆளப்படுகிறது? Inda ûr ârâlê âla-padugirradu ?
12. What is the cow eating ?.......	பசு என்ன தின்கிறது? Paçu enna tingirradu ?
13. You must submit...............	அடங்க வேண்டும். Adangga vêndum.
14. Dont bite	கடிக்க வேண்டாம். Kadikka vêndâm.
15. Was this cloth she wore woven.	அவள் கட்டின புடவை நெய்யப்பட்டதா? Aval kattina pudavei neyya-pattadâ ?
16. Has he paid for the garment ?...	அந்த வஸ்திரத்துக்குப் பணஞ் செலுத்தி இருக்கிறானா? Anda vastirattukku panam çelutti-irukkirrânâ ?

*Commonly: எழுதியிருக்கிறது=it has written.

EXERCISE 30.

TAMIL.	ENGLISH.
97. (a.)	
1. நீ இப்படிச் செய்தால் தண்டனை வரும். [or even தண்டிக்கப்படுவாய்.] Nî ippaḍi çeydâl, taṇḍanei varum.	If you do so, you will be punished.
2. காவற்காரன் அப்படிச் சொன்னால், அவன் தண்டிக்கப்பட வேண்டும். Kâval-kâran appaḍi çonnâl, avan taṇḍikka-paḍa vêṇḍum.	If the watchman says so, he must be punished.
3. அவன் அதிகமாய் நடந்தால் கால் நோகும். Avan adigamây naḍandâl kâl nôgum.	If he walk much, his legs will ache.
4. நாய் கடித்தால் அதை அடிக்க வேண்டும். Nây kaḍittâl adei aḍikka vêṇḍum.	If the dog bites you must beat it.
5. கணக்கனை அனுப்பினால் கேட்பார்கள். Kaṇakkanei anuppinâl kêḍpârgaḷ.	If you send the accountant they will listen.
6. தீமை செய்தால் துன்பம் விளையும். Tîmei çeydâl tunbam viḷeiyum.	If you do evil, affliction will result [from it.]
7. நல்லது, என் மகன் இந்த வழக்கைக்குறித்துச் சரியாகத் தீர்ப்புச்செய்தால். Nalladu, en magan inda vaṛakkei kurrittu çariyâga tîrppu çeydâl.	Well, if my son gives a right decision in this case.
8. உன்னைக் கண்டால் அவனுக்குச் சந்தோஷமாயிருக்கிறது. Unnei kaṇḍâl avanukkuç çandôshamây irukkirradu.	He rejoices wherever he sees you.
9. ஊரார் பயிர்செய்தால்............ Ûrâr payir-çeydâl.	If the villagers sow.
10. இந்த வழக்குத் தீர்ந்தால் எனக்கு நிலம் உண்டு. Inda vaṛakku tîrndâl enakku nilam uṇḍu.	If this dispute be decided, I (shall) have land.

N. B. These forms seem to have originated in ablative cases of the verbal participle or of the root used as a noun: செய்து, செய்தால் = by the doing, [செய்கையில் = in the doing. Compare with the gerund in *du*.

ENGLISH.	TAMIL.
(*b.*)	
1. If you call, he will come.	நீ கூப்பிட்டால், அவன் வருவான். Nî kûppiṭṭâl, avan varuvân.
2. If they plough the land, corn will be produced.	அவர்கள் நிலத்தை உழுதால் பயிர் விளையும். Avargaḷ nilattei uṛuđâl payir viḷeiyum.
3. If afflictions come you must bear [them.]	துன்பங்கள் வந்தால் பொறுக்கவேண்டும். Tunbanggaḷ vanđâl porrukka vêṇḍum.
4. If it rain the villagers will plough.	மழை பெய்தால் ஊரார் உழுதுகொள்ளுவார்கள். Maṛei peyđâl ûrâr uṛuđu koḷḷuvârgaḷ.
5. If the child cries we must go.	பிள்ளை அழுதால் நாம் போகவேண்டும். Piḷḷei aṛuđâl nâm pôga vêṇḍum.
6. If he pronounces clearly, I shall understand.	அவன் தெளிவாய் உச்சரித்தால் எனக்குத் தெரியும். Avan teḷivây uc'charittâl enakku teriyum.
7. What lesson is he reading to the *Munshi*?	அவன் முன்ஷியிடத்தில் என்ன பாடம் வாசிக்கிறான்? Avan munshiyiḍattil enna pâḍam vâçikkirrân?
8. If the gentleman will decide this dispute rightly.	துரை இந்த வழக்கைச் சரியாகத் தீர்ப்புச் செய்தால். Durei inda vaṛakkei çariyâga tîrppu-çeydâl.
9. If you leave me thus, what shall I do?	நீர் என்னை இப்படி விட்டுவிட்டால் நான் என்ன செய்வேன்? Nîr ennei ippaḍi viṭṭu-viṭṭâl nân enna çeyvên?
10. If the villagers stand there what will the gentleman say?	ஊரார் அங்கே நின்றால் துரை என்ன சொல்லுவார்? Ûrâr anggê ninrrâl durei enna çolluvâr?
11. If we boil rice they will pay the money.	நாம் சோறாக்கினால் அவர்கள் பணஞ் செலுத்துவார்கள். Nâm çôrr'âkkinâl avargaḷ paṇam çeluttuvârgaḷ.
12. If the boy forget his lesson, he must be beaten.	பையன் பாடத்தை மறந்தால் அவன் அடிபடவேண்டும். Peiyan paḍattei marrandâl avan aḍi-paḍa-vêṇḍum.

Comp. III Gram. 141.

EXERCISE 31.

TAMIL.	ENGLISH.
99. *(a.)*	
1. இங்கே வருவாய் ஆனால், அந்தப் பணத்தை உனக்குத் தருவேன். Inggê varuvây ânâl, anđa paṇattei unakku taruvên.	If you will come here I will give you that money.
2. நீ அந்த ஊருக்கு இப்பொழுது போகவேண்டும்; ஏன் என்றால், உன் தகப்பன் உன்னை வரச்சொன்னார். Nî anđa ûrukku ippoṛuđu pôga vêṇḍum; ên enrrâl, un tagappan unnei vara-çonnâr.	You must go now to that village, for your father told you to come.
3. இந்தப் பாடத்தைப் படித்தாயே ஆனால், இது உனக்குத் தெரியும். Inđa pâḍattei padittâyê ânâl iđu unakku teriyum.	If you had read this lesson, you would understand this.
4. பசு கன்றை ஈன்றதானால், நாம் போய் அதைப் பார்க்கவேண்டும். Paçu kanrrei înrrad'ânâl nâm pôy ađei pârkka vêṇḍum.	We must gc and see the cow, if it has borne a calf.
5. ஆனால் பரீட்சை செய்வோம். Ânâl parîkshei çeyvôm.	If so, we will make the experiment.
6. குற்றம்பார்க்கில், சுற்றம் இல்லை. Kuttam pârkkil, çuttam illei.	If you look into faults, you will have no relatives about you.
7. ஆனால் என்ன? என் மீசையிலே மண் படவில்லை. Ânâl enna? en mîçeiyilê maṇ paḍa-illei.	Well! what of that? there is no sand on my moustache.

ENGLISH.	TAMIL.
(*b.*)	
1. What did you eat?	நீ என்னத்தைப் பொசித்தாய்? Nî ennattei poçittây ?
2. If you slept in the house you must have heard it.	வீட்டிலே தூங்கினாயே ஆனால், அதை நீ கேட்டிருக்கவேண்டும். Vîṭṭilê tûnginâyê ânâl, adei nî kêṭṭ'irukka vêṇḍum.
3. If he has said this I shall go.	அவன் அப்படிச் சொல்லி இருக்கிறானே ஆனால், நான் போவேன். Avan appaḍi çolli-irukkirrânê ânâl, nân pôvên.
4. If he will pay me the money I will write the petition.	அவன் எனக்குப் பணஞ் செலுத்தினால் அந்த விண்ணப்பத்தை எழுதுவேன். Avan enakku paṇam çeluttinâl anda viṇṇappattei eruduvên.
5. They came before I wrote the letter, because they had heard it from the villagers.	நான் காகிதம் எழுதுமுன்னமே வந்தார்கள், ஏனெனில் ஊராராலே அதைக் கேட்டிருந்தார்கள். Nân kâgidam erudu'munnamê vandârgaḷ ên-enil, ûrârâlê adei kêṭṭ'irundârgaḷ.
6. This is evil, for many will be destroyed by it.	இது தீமை ஏன் எனில், இதினால் அநேகர் கெடுவார்கள். Idu tîmei, ên-enil, idinâl anêgar keḍuvârgaḷ.
7. Shall we try it?	அதைப் பரீட்சை செய்வோமா? Adei parîkshei çeyvômâ.
8. Whose fault is this?	இது ஆருடைய குற்றம்? Idu ârudeiya kuttam?
9. Did your father tell you to go; if so go at once!	உன் தகப்பன் போகச் சொன்னாரா? சொன்னாரே ஆனால் உடனே போ! Un tagappan pôga çonnârâ, çonnârê ânâl udanê pô !
10. If you cultivate will it grow up at once.	நீ பயிர் செய்தால், உடனே விளையுமா? Nî payir çeydâl, udanê viḷeyumâ?
11. Is what he said right or is it not?	அவன் சொன்னது சரியா, அல்லவா? Avan connadu çariyâ, allavâ?
12. If they build houses in the jungle who will know it?	அவர்கள் காட்டிலே வீடு கட்டினால் ஆருக்குத் தெரியும். Avargaḷ kâṭṭilê vîḍu kaṭṭinâl ârukku teriyum?

EXERCISE 32.

ENGLISH.	TAMIL.
102. (*a.*)	
1. When will you pay your tax ?...	நீங்கள் எப்போ கிஸ்திப்பணத்தைச் செலுத்துவீர்கள்? Ninggaḷ eppô kisti-paṇattei çeluttuvîrgaḷ.
2. Have you reaped the produce ?.	மாசூல் அறுத்திருக்கிறீர்களா? Mâçûl arrutt'irukkirrêrgalâ?
3. Before I reaped the produce I **paid my** instalment of tax.	நான் மாசூல் அறுக்கும் முன்னே கிஸ்திப் பணத்தைச் செலுத்தினேன். Nân mâçûl arrukkum munnê kisti-panattei çeluttinên.
4. I have paid my dues (பகுதி) to **Government.**	சர்க்காருக்குச் செல்லவேண்டிய பகுதியைச் செலுத்தி இருக்கிறேன். Sarkkârukku çella vêṇḍiya pagudiyei çeluṭṭi'irukkirrên.
5. Is this the cultivator's share or **proprietor's** share ?	இது குடிவாரமா, மேல்வாரமா? Idu kuḍi-vâramâ, mêl-vâramâ ?
6. Although he reaped then, he did **not pay** the tax.	இவன் அப்பொழுது அறுத்திருந்தாலும் தீர்வை செலுத்தவில்லை. Ivan apporudu arrutt'irundâlum tîrvei çelutta-illei.
7. Although he read with the *munshi*, he does not understand **the** lesson.	முன்ஷியோடு படித்திருந்தாலும் அவனுக்குப் பாடம் தெரியாது. Munshiyôḍu paḍitt'irundâlum avanukku pâḍam teriyâdu.
8. My foot pained me, yet I came **with him.**	என் கால் நொந்தது, ஆனாலும் இவனோடு வந்தேன். En kâl nondadu, ânâlum ivanôḍu vandên.
9. The villagers came walking....	ஊரார் நடந்து வந்தார்கள். Ûrâr naḍandu vandârgaḷ.
10. Shut the door..................	கதவு சாத்து. Kadavu çâttu.
11. How can you tell what the people's share is and what the proprietor's [is]?	குடிவாரம் இது என்றும், மேல்வாரம் இது என்றும் உனக்கு எப்படித் தெரியும்? Kuḍi-vâram idu enrrum, mêl-vâram idu enrrum unakku eppaḍi teriyum ?

TAMIL.	ENGLISH.
(*b.*)	
1. சர்க்காருக்கு என்ன செல்லவேண்டும்? Sarkkârukku enna çella vêṇḍum?	How much is due to the *Sirkâr*?
2. இவன் படித்திருந்தும் முன்ஷி அல்ல. Ivan paḍitt'irundum munshi alla.	Though he has read he is not a *Munshi.*
3. அந்த ஊரார் மாசுல் அறுத்திருந்தும் கிஸ்திப்பணம் இல்லையென்றார்கள். Anda ûrâr mâçul arrutt'irundum kisti-paṇam illei enrrârgaḷ.	Those villagers refused to pay the tax, though they had reaped the produce.
4. என்னை ஆண்டீரோ? Ennei âṇḍîrô?	Hast thou ruled me?
5. கணக்கன் ஊராரிடத்தில் வரியைக் கேட்கவேண்டும்; ஏனெனில், மாசுலை முன்னமே அறுத்திருக்கிறார்கள். Kaṇakkan ûrâriḍattil variyei kêḍka-vêṇḍum; ên-enil, mâçulei munnamê arrutt'irukkirrârgaḷ.	The accountant must ask the villagers for the tax; for they have reaped the produce before.
6. அந்த நாயை அடித்தாலும் கடிக்கும். Anda nâyei aḍittâlum kaḍikkum.	Although you beat that dog, it will bite.
7. அந்தக் காட்டிலே மரங்கள் நட்டிருந்தாலும், ஊரார் உழுது பயிர் செய்யவேண்டும். Anda kâṭṭilê maranggaḷ naṭṭ'irundâlum, ûrâr uṛudu payir çeyya vêṇḍum.	Although trees have been planted in that jungle, the villagers must plough and cultivate.
8. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும். Poy çonnâlum porunda çolla vêṇḍum.	Although you tell a lie, you must suit it.
9. பிராணச் சேதம் வந்தாலும் வரும். Pirâṇa-çedam vandâlum varum.	There will probably be loss of life. [Idiom.]
10. திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு. Tirrei-kaḍal ôḍiyum dravyam têḍu.	Seek wealth though you've to travel o'er the billowy sea.
11. இவனை ஆகிலும் காண்போம். Ivanei âgilum kâṇbôm.	At least we shall see this person.
12. அவர்கள் கற்றிருந்தாலும் அறிந்தவர்கள் அல்ல. Avargaḷ katt'irundâlum arrindavargaḷ alla.	Though they have studied, they are not scholars.

Comp. 3rd Gram. 142.

Note I. The most refined differences of meaning are to be traced here.

நான் அப்படிச் சொல்லியும் போனான்,
I *did* say so, yet he went.
நான் அப்படிச் சொன்னாலும் போவான்,
He will go, although I *should* say so.

II. For all the uses of உம் see 3rd Gram. 113.

EXERCISE 33.

TAMIL.	ENGLISH.
104. *(a.)*	
1. வேலைக்காரர் வந்து கதவைத் திறக்கலாமா? Vêleikkârar vanđu kađavei tirrakkalâmâ?	May the servant come and open the door?
2. துரையுடைய சவாப்நவீஸ் அந்தக் கட்டளையை எழுதி அனுப்பலாமா? Dureiyuḍeiya Juvâb-navîs anđa kaṭṭaḷeiyei eṛuđi anuppalâmâ.	May the Gentleman's Secretary write that order and send it?
3. தாய் பிள்ளைகளை அப்படிக் காட்டிலே விட்டுவிடலாமா? Tây piḷḷeigaḷei appaḍi kâṭṭilê viṭṭu viḍalâmâ?	Is it right for the mother to leave her child in the jungle in that way?
4. நீங்கள் பாவத்தை விட்டுவிடவேண்டாமா? Nîngaḷ pavattei viṭṭu viḍa vêṇḍâmâ?	Ought you not to abandon sin?
5. பசுமாடு வீட்டிலே வரலாமா?..... Paçu-mâḍu vîṭṭilê varalâmâ?	Should a cow come into the house?
6. ஆடுகள் பேசக் கூடுமா?.......... Âḍugaḷ pêça kûḍumâ?	Can sheep speak?
7. இப்படி உச்சரிக்கக் கூடுமா?...... Ippaḍi ucc'harikka-kûḍumâ?	Is it right to pronounce so?
8. அதிகமாகவே இருக்கலாம் என்று நினைக்கிறேன். Ađigamâgavê irukkalâm enrru nineikkirrên.	I think it is *probably* more.
9. அந்த வேலைக்காரனை அப்படித் தண்டிக்கலாமா? Anđa vêlei-kâranei appaḍi daṇḍikkalâmâ?	Is it right to punish that servant so?
10. அந்தக் கடினமான பாடத்தைப் படிக்கக் கூடுமா? Anđa kaḍinamâna pâḍattei paḍikka kûḍumâ?	Who can learn that difficult lesson?
11. இது யாராலே ஆகும்? Iđu ârâlê âgum?	Who can perform this?
12. குடிகளுக்குத் தெரியப்படுத்தலாமா? Kuḍigaḷukku teriya-paḍuttalâmâ?	May I give this information to the people?
13. வானத்தையும் பூமியையும் படைத்தவர் இதையுஞ் செய்யக்கூடும். Vânatteiyum b'hûmiyeiyum paḍeittavariđeiyum çeyyakûdum.	The Creator of heaven and earth can do this also.

These forms require careful analysis.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. May the little boy shut the door of the house?	சின்னப் பையன் வீட்டினுடைய கதவைச் சாத்தலாமா? Çinna peiyan vîttinuḍeiya kađavei çâttalâmâ ?
2. Shut the door................	கதவு சாத்து. Kađavu çâttu.
3. He may shut the door	அவன் கதவைச் சாத்தலாம். Avan kâđavei çâttalâm.
4. He can (is able to) shut the door.	அவன் கதவு சாத்தக் கூடும். Avan kađavu çâtta-kûdum.
5. May they open the door? Yes!	அவர்கள் கதவு திறக்கலாமா? திறக்கலாம். Avargaḷ kađavu tirrakkalâmâ ? tirrkkalâm.
6. May I call the servants? Yes!	நான் வேலைக்காரரைக் கூப்பிடலாமா? கூப்பிடலாம். Nân vêlei-kârarei kûppidalâmâ? kûppiḍalâm.
7 Can the boy lift this weight? yes!	அந்தப் பையன் இந்தப் பாரத்தை எடுக்கக் கூடுமா? எடுக்கக் கூடும். Anđa peiyan inđa bârattei eḍukka kûdumâ ? eḍukka kûdum.
8. Although the people were come he slept in the house.	சனங்கள் வந்திருந்தும், அவன் வீட்டிலே தூங்கினான். Çananggaḷ vanđ'irunđum, avan vîṭṭilê tûnginân.
9. Is it right to beat the little boy so?	சின்னப் பையனை அப்படி அடிக்கலாமா? Çinna peiyanei appaḍi aḍikkalâmâ ?
10. Although the mother comforted the little child it wept.	தாய் சின்ன பிள்ளையைத் தேற்றினாலும் அழுதுகொண்டது. Tây çinna piḷḷeiyei têttinâlum aṛuđu'koṇḍađu.
11. Can you speak with the gentleman at this time?	இந்தவேளை நீ துரையிடத்தில் பேசலாமா? Inda vêḷei nî đureiyiḍattil pêçalâmâ?
12. Ought the little boy to come on foot (walking)?	சின்னப் பையன் நடந்துவரக் கூடுமா? Çinna peiyan naḍanđu vara kûḍumâ?
13. May the *Munshi* see the lesson you have written?	நீர் எழுதியிருக்கிற பாடத்தை முன்ஷி பார்க்கலாமா? Nîr eṛuđi irukkirra pâḍattei munshi pârkkalâmâ?
14. Must the child weep for the mother?	பிள்ளை தாய்க்காக அழலாமா? Piḷḷei tâykkâga aṛalâmâ?
15. There are ten loads of iron, I think.	பத்துபாரம் இரும்பு இருக்கும் என்று நினைக்கிறேன். Pattu bâram irumbu irukkum enrru nineikkirrên.

Compare 3rd Grammar 125, 124.

*N. B. Here 1. கதவைச் சாத்தல் ஆமா? is exactly.
Will the door-shutting become? See Lesson 47.
சாத்தல் is a verbal noun = *the shutting*, and is the subject.
ஆம் = ஆகும் = *it will become.*
2. நான் வர கூடும், *I can or may come.*
Here வர is = வரல் = coming.
Will my coming suit?

EXERCISE 35.

ENGLISH.	TAMIL.
100. (a.)	
1. The bazaar-man beat his cat......	கடைக்காரன் பூனையை அடித்தான். Kaḍei-kâran pûneiyei aḍittân.
2. The Muhammedan killed his dog.	துலுக்கன் தன்னுடைய நாயைக் கொன்று போட்டான். Tulukkan tannuḍeiya nâyei konrru pôṭṭân.
3. The people left their houses and emigrated.	சனங்கள் தங்கள் வீடுகளைவிட்டு, வலசை வாங்கினார்கள். Çananggal tanggaḷ vîḍugaḷei viṭṭu, valaçei vângginârgaḷ.
4. There is honey in the jungle....	காட்டிலே தேன் உண்டு. Kâṭṭilê tên uṇḍu.
5. Is there honey in the jungle....	காட்டிலே தேன் உண்டா? Kâṭṭilè tén uṇḍâ?
6. There is no honey in the jungle.	காட்டிலே தேன் இல்லை. Kâṭṭilê tên illei.
7. Give me a drop of water.......	எனக்கு ஒரு துளித் தண்ணீர் கொடு. Enakku oru tuḷi-taṇṇîr koḍu.
8. Is it right to catch flies?........	ஈகளைப் பிடிக்கிறது சரியா? Îgaḷei piḍikkirradu çariyâ ?
9. Did the villagers kill the bazaar-man's dog? No the Muhammedan killed it.	ஊரார் கடைக்காரனுடைய நாயை அடித்துப்போட்டார்களா? இல்லை, துலுக்கன் கொன்றுபோட்டான். Ûrâr kaḍei-kâranuḍeiya nâyei aḍittu pôṭṭârgaḷâ? Illei, Tulukkan konrru pôṭṭân.
10. Come when I write the letter....	நான் காகிதத்தை எழுதும்போது நீ வா. Nân kâgidattei eṛudum pôḍu nî vâ.
11. Come when I have written the letter.	நான் காகிதத்தை எழுதினபிற்பாடு வா. Nân kâgidattei eṛudina pirrpâḍu vâ.
14. What is this for?........................	இதென்னத்திற்கு? Id'ennattirrku ?
15. I obtained this money by his means.	அவர் மூலமாய் இந்தப் பணம் எனக்குக் கிடைத்தது. Avar mûlamây inda paṇam enakku ki-ḍeittadu.

EXERCISE 50.

TAMIL.	ENGLISH.
162. *(a.)*	
1. அவன் சிறு குழந்தையைக் கொண்டு வந்து, என் பக்கத்திலே கிடத்தி விட்டுப் போனான். Avan çirru kuṛanđeiyei koṇḍu-vanđu, en pakkattilê kiḍatti viṭṭu pônân.	He brought a little infant, laid it down by my side, left it, and went away.
2. அவனுடைய தகப்பன் தனக்குள்ளே ஆச்சரியப்பட்டு, மாறு வேஷங்கொண்டு, நியாயஸ்தலத்துக்குச் சமீபத்திலே வந்திருந்தான். Avanuḍeiya tagappan tanakkuḷḷê âççariya-paṭṭu, mârru vêsham koṇḍu, nyâya-çtalattukku çamîbattilê vanđ'irundân.	His father wondered in himself, assumed a different costume, and came near the place of justice.
3. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் (ஆகும்=ஆவான்)." Eṛutt'arrivittavan irreivan âgum.	He who teaches letters will become (=be as) a king.
4. நான் சொன்னபடி கேட்டுக்கொண்டிருந்தால் உனக்கே பட்டமுங் கட்டுவித்து, விவாகமுஞ் செய்விக்கிறேன். Nân çonna paḍi kêṭṭu-koṇḍ'irundâl-unakkê paṭṭamum kaṭṭuvittu, vivâgamum çeyvikkirrên.	If you listen to me I will cause you to obtain the kingly title, and also arrange for your marriage.
5. பால் காய்ச்சு. Pâl kayççu.	Boil the milk.
6. எழும்பு நீ! Eṛumbu nî!	You get up!
7. அவனை எழுப்பு Avanei eṛuppu.	Rouse him (up) (from sleep.)
8. அந்தக் கல்லை உருட்டிப்போடு. Anđa-kallei uruṭṭi pôḍu.	Roll away that stone.
9. "பசுவின்பாலை வற்றக் காய்ச்சினாலும் தன் சுவை குறைபடாது." Paçuvin pâlei vatta kayççinâlum tan çuvei kurrei-pạḍâdu.	"Though you boil away cow's milk it will not lose its sweetness."

ENGLISH.	TAMIL.
(b.)	
1. They brought a little infant and laid it before me.	அவர்கள் சின்னக் குழந்தையைக் கொண்டு வந்து என் முன் கிடத்தினார்கள். Avargaḷ çinna kuranđeyei koṇḍu vanđu en mun kiḍattinârgaḷ.
2. The physician led the mother to the house.	வைத்தியன் தாயாரை வீட்டுக்கு நடத்திக் கொண்டு போனார். Veittyan tâyârei viṭṭukku naḍatti koṇḍu pônâr.
3. The gentleman caused the watchman to be called.	துரையானவர் காவற்காரனை அழைப்பித்தார். Dureiyânavar kâval-kârnnei aṛeippittâr.
4. Why have you caused the merchant to be sent for ?	ஏன் வர்த்தகனை அழைப்பித்தீர்? Ên varttaganei aṛeippittîr ?
5. Turn the bandy round……….	பண்டியைத் திருப்பு. Baṇḍiyei tiruppu.
6. Put that man down………….	அந்த மனிதனை இறக்கு. Anđa manitanei irrakku.
7. Lift that bundle……… …..	அந்த மூட்டையை எடு (தூக்கு). Anđa mûṭṭeiyei eḍu.
8. Put that bundle upon the bandy.	அந்த மூட்டையைப் பண்டியில் ஏற்று. Anđa mûṭṭeiyei baṇḍiyil êttu.
9. Boil that conjee for the infant..	குழந்தைக்கு அந்தக் கஞ்சி காய்ச்சு. Kuranđeikku anđa kançi kâyççu.
10. Drive the bullocks…………	மாடுகளை ஓட்டு. Mâḍugaḷei ôṭṭu.
11. They lifted up the child upon the horse.	பிள்ளையைக் குதிரையின்மேல் ஏற்றினார்கள். Piḷḷeiyei kuđireiyin mêl êttinârgaḷ.
12. The rats were astonished to see the cats.	எலிகள் பூனைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டன. Eligaḷ pûneigaḷei kaṇḍu âççariya-paṭṭana.
13. T'.. cats rejoice to see the rats.	பூனைகள் எலிகளைக் கண்டு சந்தோஷப்பட்டன. Pûneigaḷ eligaḷei kaṇḍu çanđôsha-pattana.
14. Did you boil the milk ?………	பால் காச்சினாயா? Pâl kâççinâyâ.
15. Will you lift the cotton bales ?	பஞ்சு மூட்டைகளை எடுப்பாயா? Pançu mûṭṭeigaḷei eḍuppâyâ ?
16. Don't drive the bandy………..	பண்டி ஓட்டாதே. Baṇḍi ôṭṭâđê.

Comp. 3rd Grammar, 103.

EXERCISE 51.

TAMIL.	ENGLISH.
167. *(a.)*	
1. அதைக் கேட்டு இராசா சந்தோஷித்து, அவனை நியாயாதிபதியாக ஏற்படுத்திச் சகல வெகுமானமுஞ்செய்து, தன்னிடத்தில் வைத்துக்கொண்டான். Adei kêttu irâçâ çandôshittu, avenei nyâyâdipadiyâga êrpadutti, çaga'a vegumânamum çeydu, tannidattil veittu-kondân.	The king hearing that rejoiced, appointed him a judge, gave him all manner of rewards, and placed him near himself.
2. இன்றைக்கு உன்னைப் பெரியவன் ஆக்குவேன். Inrreikku unnei periyavan âkkuvên.	To-day I will make you a great man.
3. ஒரு வாரத்துக்குள்ளாக நான் நன்றாய் விசாரணை பண்ணுவேன். Oru vârattukk ullâga nân nanrrây viçâranei pannuvên.	I will investigate it properly within a week.
4. காதாரக்கேட்டுச் சந்தோஷத்தை அடைந்தேன். Kâdâra kêttu çandôshattei adeindên.	He heard it clearly and rejoiced.
5. நெஞ்சாரப் பொய் சொல்லக்கூடாது. Nençâra poy çolla kûdâdu.	Don't tell a wilful lie.
6. தங்கம் தரையில்தான் கிடந்தால் என்ன? Tanggam tareiyil tân kidandâl enna?	What though pure gold lie on the ground?
7. எந்தப் பிரகாரமாகச் சுத்தம்பண்ணுவீர்கள்? Enda pragâramâga çuttam pannuvirgal ?	How will you cleanse it ? (In what manner).
8. மனங்குழைந்து தோத்திரஞ் செலுத்தினார்கள். Manam kuzeindu tôttiram çelutti-nârgal.	They rendered thanks with hearts deeply affected.
9. என்றென்றைக்கும் அவரைத் துதிசெய்வார்கள். Enrrenrreikkum avarei tudi çeyvârgal.	They will praise him for ever.
10. கண்ணாரக் கண்டு களித்தேன். Kannâra kandu kalittên.	I saw him clearly and rejoiced exceedingly.
11. இன்றைக்கோ, என்றைக்கோ, தெரியாது. Inrreikkô, enrreikk ,, teriyâdu.	I don't know (whether it is) to day, or at any other time.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. The king came with elephants chariots and foot soldiers.	அரசன் ஆனைகளோடும் தேர்களோடும் காலாள்களோடும் வந்தார். Arasan âneigaḷôḍum têrgaḷôḍum kâlâḷgaḷôḍum vandâr.
2. Although you saw it with your own eyes do not speak of it to any one !	நீ அதைக் கண்ணாரக் கண்டிருந்தும் ஒருவருக்கும் சொல்லாதே. Nî adei kaṇṇâra kaṇḍ'irundum oruvarukkum çollâdê.
3. He will perish for ever.........	அவன் என்றென்றைக்கும் கெட்டுப்போவான். Avan enrrenrreikkum keṭṭu pôvân.
4. That king's foot soldiers carried burdens of gold.	அந்த அரசனுடைய காலாட்கள் பொன் சுமைகளைச் சுமந்தார்கள். Anda araçanuḍeiya kâlâḷgaḷ pon-çumeigaḷei çumandârgaḷ.
5. We all rejoiced and praised the king.	நாம் எல்லாருஞ் சந்தோஷப்பட்டு அரசனைத் துதித்தோம். Nâm ellârum çandôsha-paṭṭu araçanei tudittôm.
6. They purified the chariots that day for the women.	அவர்கள் அன்றைக்கு ஸ்திரீகளுக்காகத் தேர்களைச் சுத்தம்பண்ணினார்கள். Avargaḷ anrreikku strîgaḷukkâga têrgaḷei çuttam paṇṇinârgaḷ.
7. If you sin wilfully how can you escape ?	நீ மனதாரப் பாவம் செய்தால் எப்படித் தப்பித்துக்கொள்ளுவாய்? Nî manadâra pâvam çeydâl eppaḍi tappittu-koḷḷuvây ?
8. I heard distinctly....	நான் காதாரக் கேட்டேன். Nân kâdâra kêttên.
9. To-day I shall have much trouble.	இன்றைக்கு எனக்கு அதிக தொந்தரவு கிடைக்கும். Inrreikku enakku adiga tondaravu kiḍeikkum.
10. Pray examine this well, my father!	தகப்பனே, இதைத் தாங்கள் நன்றாய் விசாரணை செய்யவேண்டும். Tagappanê, idei tâṅggaḷ nanrrây viçâraṇei çeyya vêṇḍum.
11. Will not the judge do justice to the villagers ?	நியாயாதிபதி ஊராருக்கு நியாயஞ் செய்யமாட்டாரா? Nyâyadipadi ûrârukku nyâyam çeyya mâṭṭârâ ?
12. The gentleman will punish the watchman.	துரை காவற்காரனுக்கு தண்டனை செய்வார். Durei kâval-k'ranukku taṇḍanei ceyvâr.

EXERCISE 52.

TAMIL.	ENGLISH.
171. *(a.)*	
1. கடவுள் அறிய நான் இதைச் செய்ய வில்லை. Kaḍavuḷ arriya nân iđei çeyya illei.	God knows that I did not do this.
2. பாதிச் சேறு கூடப் போகவில்லை..... Pâđi çêrru kûḍa pôga illei.	Not even half the mud was removed.
3. நீ ரெம்பச் சாப்பிடுகிறாய்.......... Nî remba çâppiḍugirrây.	You eat much.
4. எனக்கு ரெம்பவும் தொந்தரவு பண்ணுகிறான். Enakku rembavum tonđaravu paṇṇugirrân.	He gives me much trouble.
5. ஒருவனுக்கு மழை வெள்ளத்திலே தலைமயிர் நீரில் அலையக் கீழே வெள்ளம் ஓடக் கல்லுகள் உடம்பிலே உறுத்த நித்திரை பிடிக்குமா? Oruvaṇukku maṛei-veḷḷattilê talei-mayir nîril aleiya, kîṛê veḷḷam ôḍa, kallugaḷ uḍambilê urutta nittirei piḍikkumâ?	Can any man sleep while the hairs of his head are washed about in the water, in the torrents of rain, while the flood rushes under him, and the stones rub against him?
6. "உள்ளங் குழைய, உடல் குழைய, உள்ளிருந்த — கள்ளங் குழைய என்று காண்பேன்?" Uḷḷam kuṛeiya, uḍal kuṛeiya, uḷḷirunđa kaḷḷam kuṛeiya enrru kâṇbên?	
7. இன்னும் ஒரு பரீட்சை பெரிதாகச் செய்தால் ஒழிய எனக்குச் சந்தேகந் தீராது. Innum oru parîḍçei periđâga çeyđâl oṛiya enakku çanđêgam tîrâđu.	My doubt will not be solved unless you make yet another great trial.
8. அன்று முதலாக வர வர நோய் அதிகரிக்கிறாப்போல் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்தான். Anrru muđalâga varavara nôy ađigarikkirrâ pôl pâçânggu paṇṇi koṇḍ'irunđân.	From that day he pretended that the disease gradually increased.
9. அதைச் சற்றே எட்ட வைத்துவிடு. Ađei çattê eṭṭa veittu viḍu.	Put it a little distance off.
10. முதிர்ந்திருந்த பழம் ஒழியக் காற்றினால் நல்ல காய்கள் விழுவதும் உண்டு. Muđirnđ'irunđa paṛam oṛiya kâttinâl nalla kâygaḷ viṛuvađum uṇḍu	Besides the fruits that are well ripened, the promising green fruits fall off sometimes by the wind.
11. வா என வருவான். Vâ ena varuvân.	He will come if [you] tell him.
12. சிந்தையின் மகிழ்ச்சி பொங்க இருந்தபின் செப்பலுற்றான். Çinđeiyin magirççi pongga irunđapin çeppal uttân.	While the joy of his soul passed all bounds, after he had seated himself, he spake.

Comp. 3rd. Gram. 140.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Unless you pay the money you will not be allowed to go.	நீ பணஞ்செலுத்தினால் ஒழிய உன்னைப் போகவிடார்கள். Nî panam çeluttinâl oṛiya unnei pôga viḍârgaḷ.
2. Unless a man eats he will not live.	மனிதன் சாப்பிடாமற்போனால் பிழைக்க மாட்டான். Manidan çâppiḍâmal pônal piṛeikka mâṭṭân.
3. I did not obtain even that......	அதுவுங்கூட எனக்குக் கிடைக்கவில்லை. Aduvum kûḍa enakku kiḍeikka illei.
4. When shall I obtain knowledge so that my ignorance shall depart, my doubts remove, and my heart rejoice?	அஞ்ஞானம் என்னை விட்டு நீங்க, சந்தேகம் எல்லாம் தெளிந்துபோக, என் மனம் மகிழ நான் எப்பொழுது அறிவை அடைந்துகொள்ளுவேன்? Annânam ennei viṭṭu nîngga, çandêgam ellâm teḷindu pôga, en manam magiṛa nan eppoṛudu arrivei aḍeindu koḷḷuvên ?
5. He gave the money spontaneously to all who asked, so that their hearts rejoiced.	தன்னைக் கேட்ட எல்லாருடைய இருதயமுஞ் சந்தோஷிக்க வலியக் கொடுத்தார். Tannei kêṭṭa ellâruḍeiya irudayamum çandôshikka valiya koḍuttâr.
6. My servant goes and comes when I tell him.	என் வேலைக்காரன் வா என வருவான், போ எனப் போவான். En vêlei-kâran vâ ena varuvân, pô ena pôvân.
7. By conversation the way will seem short.	பேசப் பேச வழி தொலையும். Pêça pêça vaṛi toleiyum.
8. You must not speak or think so.	அப்படிப் பேசவும் நினைக்கவும் படாது. Appaḍi pêçavum nineikkavum paḍâdu.
9. He gave much..................	ரொம்பக் கொடுத்தான் (அதிகமாக). Romba koḍutt ʾn, (adigamâga)

EXERCISE 53.

TAMIL.	ENGLISH.
173. *(a.)*	
1. ஒரு ஆனையையும், மூன்று குதிரைகளையும், ஏழு தேர்களையும், ஒன்பது காலாட்களையும், நாலு ஸ்திரீகளையும், தங்கத்தில் ஒரு பாரத்தையும் கொடுக்கவேண்டும். Oru âneiyeiyum, mûnrru kuđireigaḷeiyum, èṛu têrgaḷeiyum, onbađu kâlâṭgaḷeiyum, nâlu strîgaḷeiyum, tanggattil oru bâratteiyum koḍukka vênḍum.	You must give thus: one elephant, three horses seven chariots, nine foot soldiers, four women and a load of pure gold.
2. ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தைந்தாம் வருஷத்திலே அது நடந்தது. Âyirattu-eṇṇûttu-eimbatt'eindâm varushattilê ađu naḍandađu.	That happened in the year 1855.
3. சாட்சிக்காரராகிய பதினைந்துபேர் கூடவந்தார்கள். Çâḍçi-kârarâgiya pađineinđu pêrkûḍa vanđârgaḷ.	Fifteen witnesses came with (him).
4. எத்தனை மணி? .... Ettanei maṇi ?	What o'clock (is it)?
5. எத்தனை மணிநேரம்? .... Ettanai maṇi-nêram?	What (bell) time is it?
6. எத்தனை மணி ஆயிற்று? .... Ettanei maṇi âyittu?	What time is it (has elapsed)?
7. பதினைந்து நாழிகை ஆயிற்று .... Pađineinđu nâṛigei âyittu.	(It has become 15 Tamil hours) It is noon.
8. இருவருமாக வந்தார்கள் .... Iruvarum âga vanđârgaḷ.	The two came together.
9. தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும். Tân onrru nineikka déyvam onrru nineikkum.	While man thinks one thing, the Divine being will think another.
10. ஒன்பதினாயிரம் வராகனை இந்தப் பிள்ளைக்குக் கொடு. Onbađinâyiram varâganei inđa piḷḷeikku koḍu.	Give this child 9000 pagodas.
11. அந்த மூன்றையும் ஒன்றாய்க் கலந்து சமையல் பண்ணினான். Anđa mûnrreiyum onrrây kalanđu çameiyal paṇṇinân.	He mingled these 3 together and cooked (them).
12. மூன்று பெண்டுகளுக்குள்ளே ஒருத்தி, காலுங்கழியும் ஒன்றடி என்றும்; மற்றொருத்தி இறகும் இலையும் ஒன்றடி என்றும்; பின் ஒருத்தி வாயும் கனியும் ஒன்றடி என்றும் பேசிக்கொண்டு போனார்கள். Mûnrru peṇḍugaḷukkuḷḷê orutti, kâlum kaṛiyum onrr'aḍi enrrum; mattorutti irragum ileiyum onrr'aḍi enrrum; pin orutti vâyum kaniyum onrr'aḍi enrrum, pêçi koṇḍ pônârgaḷ.	One of the 3 women said "the leg and the stick are one, wench;" another said, "The wing and leaf are one, wench;" yet another said "the mouth and the fruit are one, wench;" thus they spoke and passed on.
13. மாணிக்கம் ஒன்று வெகுமானமாகப் பெற்றுக்கொண்டு போனான். Mâṇikkam onrru vegumânamâga ṛettu-koṇḍu pônân.	He obtained a gem as a present.

Comp. 3rd. Grammar. 159.

ENGLISH.	TAMIL.	
(*b.*)		
1. Fifty-persons came.............	ஐம்பது பெயர் வந்தார்கள். Eimbađu peyar vanđârgaḷ.	Note the difference between these two:- The உம் being the difference.
2. The whole 50 persons came....	ஐம்பது பெயரும் வந்தார்கள். Eimbađu peyarum vanđârgaḷ.	
3. This happened in the year one thousand four hundred and twenty-seven.	இது ஆயிரத்து நானூற்று இருபத்தேழாம் வருஷத்தில் நடந்தது. Iđu âyirattu nânûttu iruppatt'êṛam varushattil naḍanđađu.	
4. There are 24 nâṛigei in one day.	ஒரு பகலுக்கு இருபத்து நாலு நாழிகை. Oru pagalukku irupattu nâlu nâṛigei (uṇḍu).	
5. There are 7 days in a week, and 52 weeks in a year.	ஒரு வாரத்திலே ஏழு நாளும், ஒரு வருஷத்தில் ஐம்பத்திரண்டு வாரமும் உண்டு. Oru vârattilê eṛu nâḷum, oru varushattil eimbatt'iraṇḍu vâramum uṇḍu.	
6. How many peons are there in the court?	கோர்ட்டிலே எத்தனை சேவகர் உண்டு? Courtilê ettanei çêvagar uṇḍu ?	
7. What o'clock is it? (How many bells?)	எத்தனை மணி? Ettanei maṇi ?	
8. They came, ten together........	பத்துப் பெயருமாக வந்தார்கள். Pattu peyarum âga vanđârgaḷ.	
9. Give the boy 10,000 pagodas....	அந்தப் பையனுக்கு பதினாயிரம் வராகனைக் கொடு. Anđa peiyanukku pađinâyiram varâganei koḍu.	
10. Has the complainant one eye or two?	வாதிக்கு ஒரு கண்ணா, இரண்டு கண்ணா? Vâđikku oru kaṇṇâ, iraṇḍu kaṇṇâ ?	
11. He brought 10 fanams to the bazaar.	அவன் கடைக்குப் பத்துப்பணங் கொண்டுவந்தான். Avan kaḍeikku pattu paṇam koṇḍu vanđân.	
12. You may buy 2 rice-cakes for a pice.	ஒரு பைசாவுக்கு இரண்டு அப்பம் வாங்கலாம். Oru peiçâvukku iraṇḍu appam vânggalâm.	
13. The Hindûs say there are six sects.	இந்துக்கள் ஆறு மதம் உண்டு என்று சொல்லுவார்கள். Inđukkaḷ ârru mađam unḍu enrru çolluvârgaḷ.	
14. Give the servant 3 Rupees 5 Annas 6 Pice.	வேலைக்காரனுக்கு மூன்று ரூபாய் ஐந்து அணா ஆறு பைசாக் கொடு. Vêlei-kâranukku mûnrru rûpây einđu aṇâ ârru peiçâ koḍu,	
15. Five times five.................	ஐவைந்து. Eiveinđu.	

EXERCISE 54.

TAMIL.	ENGLISH.
179. (a.)	
1. தேவிக்குத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது இராசாக்களின் தலைகளைப் பலிகொடுத்தான். Dêvikku toḷâyirattu-toṇṇûtt'onbadu irâçâkkaḷin taleigaḷei bali koḍuttân.	He offered a sacrifice of 999 king's heads to the goddess.
2. ஒவ்வொன்றாய் வந்து கேட்டார்கள். Ovvonrây vandu kêṭṭârgaḷ.	They came and asked one by one.
3. இவ்விருவர் சொல்லையும் கேட்டு, சந்தேகப்பட்டு, இதற்குச் சாட்சி உண்டா என்று கேட்டான். Ivviruvar çolleiyum kêṭṭu, çandêgapaṭṭu, idarku çâḍchi uṇḍâ enrru kêṭṭân.	Having heard the words of both he doubted and asked if there were any witnesses.
4. ஒரு கண் குருடன் வரும்போது அவனைக் கண்ட கூனன் இகழ்ச்சியாக, "வாரும் ஐயா, ஒரு கண் பார்வைக்காரரே!" என்றான். Oru-kaṇ-kuruḍan varum pôdu avanei kaṇḍa kûnan igaṛchiyâga, "vârum eiyâ, oru-kaṇ-pârvei-kârarê!" enrân.	As a man blind of one eye was coming alone a hunchback mocking him said "come up sir! you who see with one eye only."
5. குருடன் கூனனுக்குச் சொல்லுகிறான், "மெய்தான் ஐயா, முதுகு மூட்டைக்காரரே! நான் ஒருவனை ஒரு கண்ணும், மற்றொருவனை ஒரு கண்ணுமாய்ப் பார்க்கிறதில்லை; யாவனையும் ஒரு கண்ணாகப் பார்ப்பேன்" என்றான். Kuruḍan kûnanukku çollugirrân, "meydân eiyâ, mudugu-mûṭṭei-kârarê! nân oruvarei oru kaṇṇum, matt'oruvarei oru kaṇṇumây pârkkirrad'illei; yâvareiyum oru kaṇṇâga pârppên," enrrân.	The blind man replies to the hunchback quite true sir Mr. Hunchback! I don't look at one person with one eye, and on another with another eye. I view all with one eye.
6. முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் சூழும்படி, கோடாகோடி சூரியர்கள் உதயமானாற்போல் விளங்கினார். Muppadu mu-kôḍi dêvargaḷum nârr-patt'oṇṇayiram munivargaḷum çûṛum paḍi, kôḍâ kôḍi çûriyargaḷ udayamânâl pôl viḷangginâr.	While thirty three times 10,000,000 gods and 48,000 devotees were around him he shone resplendant like 10 million times 10 million suns.
7. இரண்டொரு மாதத்தில் இறந்துபோவாய். Iraṇḍ'oru mâdattil irrandu pôvây.	Thou wilt die in a month or two.
8. பரிசுத்த மத்தேயு என்பவர் எழுதின சுவிசேஷம், பத்தாம் அதிகாரம், நாலாம் வசனத்தில் எழுதியிருக்கிறதாவது. Pariçutta Mattêyu enbavar eṛudina çuviçêsham, pattâm adigâram, nâlâm vaçanattil eṛudi-irrukirrad'âvadu.	In the 10th chapter of St. Matthew's Gospel, the 4th verse, it is written as follows.

ENGLISH.	TAMIL.
(*b.*)	
1. In the fourth chapter..........	நாலாம் அதிகாரத்தில். Nâlâm adigârattil.
2. A man blind of one eye.........	ஒரு கண் குருடன். Oru-kaṇ-kuruḍan.
3. One was deformed and the other had but one eye.	ஒருவன் கூனன், மற்றொருவன் ஒருகண் கெட்டவன். Oruvan kûnan, matt'oruvan oru-kan-keṭṭavan.
4. They must come one by one.....	அவர்கள் ஒவ்வொருவராய் வரவேண்டும். Avargaḷ ovvoruvarây vara vêṇḍum.
5. Place these bundles by threes.	இந்த மூட்டைகளை மும்மூன்றாய் வை. Inđa mûṭṭeigaḷei mummûnrrây vei.
6. The children are arranged five in a class.	இந்தப் பிள்ளைகள் ஒரு வகுப்புக்கு ஐவைந்து பிள்ளைகளாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். Inđa piḷḷeigaḷ oru vaguppukku eiveinđu piḷḷeigaḷâga çêrkka-paṭṭ'irukkirrârgaḷ.
7. This is the fiftieth time I've walked round the temple.	நான் கோவிலைச் சுற்றிவந்தது, இது ஐம்பதுவிசை. Nân kôvilei çutti vanđađu, iđu eimbađu viçei.
8. On an average he comes every fifth month.	இவன் சராசரி ஐந்து மாசத்திற்கு ஒருவிசை வருவான். Ivan çarâçari einđu mâçattirrku oru viçei varuvân.
9. On the second day of last month.	போன மாசத்தின் இரண்டாம் தேதி. Pôna mâçattin iraṇḍâm têđi.
10. Ten witnesses, more or less, proved the complainants statement.	ஏறக்குறையப் பத்துச் சாட்சிகள் வந்து வாதி சொன்ன காரியத்தை ருசுப்படுத்தினார்கள். Èrrakkurreiya pattu çâdchigaḷ vanđu vâđi conna kâryattei ruju-paḍuttinârgaḷ.
11. The fourth person had a bundle on his back.	நாலாவது பெயருக்கு முதுகில் ஒரு மூட்டை இருந்தது. Nâlâvađu peyarukku mudugil oru mûṭṭei irunđađu.
12. Come for your wages on the first of the month.	மாசத்தின் முதல்தேதிக்கு உன் சம்பளத்திற்கு வா. Mâçattin muđal têđikku un çambaḷattirrku vâ.
13. I will pay you the money on the 20th in the evening.	இருபதாம் தேதி சாயங்காலத்தில் பணத்தைத் தருகிறேன். Irupađâm têđi çâyanggâlattil paṇattei tarugirrên.

EXERCISE 55.

TAMIL.	ENGLISH.
183. *(a.)*	
1. இருதிறத்தாரையுங் கூப்பிடு........ Iru tirrattâreiyum kûppiḍu.	Call both parties.
2. முத்திறத்தாரிடத்திலும் விசாரணை செய்தான். Mut-(mûnru) tirrattâriḍattilum viçâraṇei çeyđân.	He enquired of all the three parties.
3. நீதியின்படி நடக்கிறவன் பாக்கியவான். Nîđiyin-paḍi naḍakkirravan pâkkiyavân.	He is blessed who acts justly.
4. "எல்லாச் சந்ததியாரும் என்னைப் பாக்கியவதி" என்பார்கள். "Ellâ-çanđađiyârum ennei pâkkiyavađi" enbârgaḷ.	"All generations shall call me blessed."
5. தன் கூட்டாளிகள் ஐந்து பெயரோடுங் கூட வந்தான். Tan kûttâḷigaḷ einđu peyarôḍum kûḍa vanđân.	He came with his 5 partners.
6. அந்த நாட்டார் எல்லாருங் கூடி இருக்கிறார்கள். Anđa nâṭṭâr ellârum kûḍi irukkirrârgaḷ.	All those country people are assembled together.
7. உன் வீட்டாரிடத்தில் விசாரி........ Un vîṭṭâr iḍattil viçâri.	Enquire of your family.
8. இவன் வெகு பாட்டாளி.......... Ivan vegu pâṭṭâḷi.	He is a great sufferer.
9. எங்கள் கோவிலுக்கு அநேகம் மருளாளிகள் உண்டு. Enggaḷ kôvilukku anêgam maruḷaḷigaḷ uṇḍu.	There are many possessed people (belonging) to our temple.
10. நியாயாதிபதி சில குற்றவாளிகளை விட்டுவிட்டார். Nyâyâđipađi çila kuttavâḷigaḷei viṭṭu-viṭṭâr	The judge allowed some criminals to go.
11. அயலாரை விசாரித்தால் தெரியும்... Ayalârei viçârittâl teriyum.	You will find it out if you enquire of the neighbours.
12. "தூண்டிற்காரனுக்கு மிதப்பின்மேலே கண்." Tûṇḍil-kâranukku miđappin-mêlê kaṇ.	"The fishers eye rests upon the float."
13. ஞானிக்கல்ல இன்பமுந்துன்பமும். Nanikk'alla inbamum tunbamum.	To the spiritual person there is neither pleasure nor suffering.
14. மூத்தோர்சொன்ன வார்த்தை அமிர்தம். Mûttôr çonna vârttei amirđam.	The word of elders is (like to) nectar.
15. இவன் பாக்கியசாலி, அவன் பத்திசாலி. Ivan pakkiyaçâli, avan patticâli.	This man is wealthy, that man is pious.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. All the villagers stood near.....	ஊரார் எல்லாருங் கிட்ட நின்றார்கள். Ûrâr ellârum kiṭṭa ninrârgaḷ.
2. My people....................	என் சனமே! En çaṇamê!
3. The people of my tribe.........	என் கோத்திரத்துச் சனங்கள். En kôttirattu-çananggaḷ.
4. All the people of the world will be astonished.	உலகத்தார் எல்லாரும் பிரமித்துக்கொள்ளுவார்கள். Ulagattâr ellârum bramittu-koḷḷuvârgaḷ.
5. All the people of the inhabited country, and those who dwell in the wilderness.	நாட்டார் காட்டார் யாவரும். Nâṭṭâr kâṭṭâr yâvarum.
6. The inhabitants of all lands praised that brave person.	எந்த நாட்டாரும் அந்தத் தைரியசாலியைத் துதித்தார்கள். Enda nâṭṭârum anda deiryaçâliyei tudittârgaḷ.
7. They are all of one caste and family.	அவர்கள் எல்லாரும் ஒரே சாதியும் ஒரு கோத்திரமும். Avargaḷ ellârum orê çâdiyum oru kôttiramum.
8. The watchman is a very hard-working man.	அந்தக் காவற்காரன் வெகு பாட்டாளியான மனிதன். Anda kâval-kâran vegu pâṭṭâḷi-âna manidan.
9. You must enquire of the neighbours of (concerning) the criminal.	குற்றவாளியைக் குறித்து அயலாரிடத்திற் கேட்கவேண்டும். Kuttavâḷiyei kurrittu ayalâriḍattil kêḍka vêṇḍum.
10. Many foolish people go about, as if possessed by a demon.	பைத்தியக்காரர் அநேகர் மருளாளிகளாகத் திரிகிறார்கள். Peittiya-kârar anêgar maruḷaḷigâḷâga tirigirrârgaḷ.
11. All the sailors left the ship.....	கப்பற்காரர் எல்லாரும் கப்பலை விட்டுப் போனார்கள். Kappal-kârar ellârum kappalei viṭṭu pônârgaḷ.
12. The fisherman sits on the bank of the river.	தூண்டிற்காரன் ஆற்றங்கரையில் உளுக்கார்ந்திருக்கிறான். Tûṇḍil-kâran âttangkareiyil uḷukkârnd' irukkirrân.

Comp. 3rd. Grammar 96.

EXERCISE. 56.

TAMIL.	ENGLISH.
186. (*a.*)	
1. பாக்கியமுடையவர்கள் ஒருவரும் இல்லை. Pâkkiyam uḍeiyavargaḷ oruvarum illei.	There are none who are happy.
2. நல்லோர் யாவரும் அவரைப் புகழுவார்கள். Nallôr yâvarum avarei pugaṛuvârgaḷ.	All good persons will praise him.
3. அதிசூரன் என்னும் பெயரையுடைய ஒரு மல்லக ஜெட்டி. Adi-çûran ennum peyarei uḍeiya oru mallaga-jeṭṭi.	A *boxer* (pugilist) of the name of Athesuran, (very brave one.) athesuran means the very brave one.
4. சிறியோரையும் பெரியோரையும் அழைத்துக்கொண்டு வா. Çirriyôreiyum periyôreiyum aṛeittu-koṇḍuvâ.	Bring all both great and small.
5. இது நல்லதுதான்.... .... Idu nalladu dân.	This is certainly good.
6. பெரியோர் வார்த்தையை தட்டாமல் நட. Periyôr vârtteiyei taṭṭâmal naḍa.	Act without rejecting the word of the great.
7. மனையாள் இல்லாத வீடு பாழ்...... Maneiyâḷ illâda vîḍu paṛ.	A house without a housewife is desolate.
8. எனக்கு அந்தக் கொடியனாலே உண்டான தொந்தரவு சிறியதல்ல. Enakku anda koḍiyanâlê uṇḍâna tondaravu çirriyad'alla.	The trouble I have had with that bad fellow is not small (great.)
9. பாவியேன் பட்டபாடு மெத்த....... Pâviyên paṭṭa pâḍu metta.	The sufferings endured by me a sinner are great.
10. தங்களுடைய ஆசீர்வாதத்தினாலே அடியேன் சுகமே இருக்கிறேன். Tanggaḷuḍeiya âçîrvâdattinâlê aḍiyên çugamê irrukkirrên.	By your blessing I your servant am in health.
11. "சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம், பெரியோர் ஆனவர் பொறுப்பது கடனே." "Çirriyôr çeyda cirru piṛei elḷâm, periyôr ânavar porruppadu kaḍanê."	It is the duty of the great to forgive the little faults of the humble (in mind).
12. உயிருள்ளவன்........................ Uyiruḷḷavan.	He who is alive.
13. உயிருள்ளோர் எல்லாரும்... .... Uyiruḷḷôr ellârum.	All the living.

Comp. 3rd Grammar 93.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. There are none who are always happy.	எந்நேரமும் பாக்கியர் ஒருவருமில்லை. Ennêramum pâkkiyar oruvarum illei.
2. The great have said so.........	பெரியோர் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். Periyôr appaḍi çolli-irukkirrârgaḷ.
3. He is a man of great wealth......	அவன் மகா பாக்கியசாலி. Avan magâ pâkkiyaçâli.
4. Well..............................	நல்லது. Nallađu.
5. Cruel people give trouble to the poor.	கொடியவர் எளியவர்களுக்குத் தொந்தரவு செய்வார்கள். Koḍiyavar eḷiyavargaḷukku tonđaravu çeyvârgaḷ.
6. All, both small and great will be there.	சிறியோர் பெரியோர் யாவரும் அங்கே இருப்பார்கள். Çirriyôr periyôr yâvarum anggê iruppârgaḷ.
7. What shall I, a sinner, do?.....	பாவியேன் என்ன செய்வேன்? Pâviyên enna çeyvên?
8. Three of his partners are great people.	அவனுடைய கூட்டாளிகளில் மூன்று பெயர் மிகவும் பெரியவர்கள். Avanuḍeiya kûṭṭâḷigaḷiḷ mûnru peyar migavum periyavargaḷ.
9. The inhabitants of that village are little people.	அந்த ஊரார் சிறியவர்கள். Anđa ûrâr çirriyavargaḷ.
10. He is a man of mercy............	அவன் இரக்கமுள்ளவன். Avan irakkamuḷḷavan.
11. Your humble servant is well by your blessing!	தங்கள் ஆசீர்வாதத்தினாலே அடியேன் சுகமாக இருக்கிறேன். Tanggaḷ âçîrvâđattinâlê çugamâga.
12. Help your servant who is but a dog.	நாயேனுக்கு உதவிசெய்யுங்கள். Nâyênukku uđavi çeyyunggaḷ.
13. All generations shall call me blessed.	எல்லாச்சந்ததியாரும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். Ellâ çanđađiyârum ennei pâkkiyavađi enbârgaḷ.
14. Little people must be humble....	சிறியோர் பணிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். Çirriyôr paṇivuḷḷavargaḷâga irukka vêṇḍum.

EXERCISE 57.

TAMIL.	ENGLISH.
189. *(a.)*	
1. அவன் சிக்காய்க் கிடக்கிறான்....... Avan "sick" ây kiḍakkirrân.	He lies sick.
2. இவன் நின்ற இடத்திற்கும் அவன் போன இடத்திற்கும் ஒரு மயில் தூரம் இருக்கும். Ivan ninra iḍattirkum avan pôna iḍattirkum oru "mile" dûram irukkum.	It is about a mile from the place where he stood to the place where he went.
3. ஜட்ஜி துரை வருகிறார்........... "Judge" durei varugirrâr.	The judge is coming.
4. அந்த மனிதன் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். Anda manidan "Hospital"-ukku pôga vêṇḍum.	That man must go to the hospital.
5. மேசை போடு..................... "Mêjai" pôḍu.	Lay the table.
6. சிவல் கோர்ட்டிலே பிராது பண்ணினான். "Civil-court"-ilê prâdu paṇṇinân.	He made a complaint in the civil court.
7. கேட்டல் கொண்டுவா........... "Kettle" koṇḍu-vâ.	Bring the kettle.
8. இண்டார்ஸ் பண்ணி அனுப்பி இருக்கிறார். "Endorse"-paṇṇi, anuppi irukkirrâr.	He has endorsed and sent it.
9 கலெக்டர் சாயிபு வந்திருக்கிறார். "Collector-Sahêb" vandirukkirrâr.	The collector has come.
10. பாதிரிதுரை எங்கே இருக்கிறார்?...... "Padre"-durei engê irukkirrâr ?	Where is the Pâdre? (minister, clergyman.)
11. கைதி ஆஜிர் பண்ணு............... "Keidi" "âjîr" paṇṇu.	Bring the prisoners.
12. இந்தப் பிரதிவாதி அப்பீலுக்குப் போனான். Inda pradivâdi "appeal"-ukku pônân.	This defendant went to make an appeal.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Bring my shoes................	என் சப்பாத்து கொண்டுவா. En çappâttu (Sabot) koṇḍu vâ.
2. Let down the musquito curtains.	தோம்தர கீழே விடு. Tômđara kîrê viḍu.
3. How many miles is it to the town?	பட்டணத்திற்கு எத்தனை மைல் தூரம்? Paṭṭaṇattirku ettanai "mile" dûram?
4. Has he laid the table?........	அவன் மேசை போட்டாச்சா? Avan "mêjai" pôṭṭ'âççâ?
5. Bring the kettle................	கேட்டல் கொண்டுவா. "Kettal" koṇḍu-vâ.
6. Have they made a complaint in the court?	கோர்ட்டிலே பிராது பண்ணினார்களா? "Court"-ilê prâđu paṇṇinârgaḷâ?
7. Has the Collector arrived?	கலெகட்டர் துரை வந்திருக்கிறாரா? "Collector"-durai vanđ'irukkirrârâ?
8. Where is the clergyman?.....	பாதிரிதுரை எங்கே? Pâđiri-durai engê.

EXERCISE 58.

TAMIL.	ENGLISH.
192. (a.)	
1. கல்லை வீணில் பறவைகள் மீதில் எறியாதே! Kallei viṇil parraveigaḷ mîđil erri-yâđê!	Do not throw stones at birds vainly
2. வாழ்வும் தாழ்வும் Vâṛvum târvum.	Prosperity and adversity.
3. போரிலே அம்புகளை எய்தார்கள் Pûrilê ambugaḷei eyđârgaḷ.	They sent arrows in the fight.
4. மகன் பிறந்தான் என்று மகிழ்ச்சியாய் இருக்கிறார். Magan pirranđân enrru magiṛchiyây irukkirrâr.	He is happy on account of the birth of a son.
5. தலைச்சுமை தாங்கக்கூடாமல் இறக்கிவிட்டான் Tale-çumei tânga-kûḍâmal irrakki viṭṭân.	Not being able to bear the burden on his head he let it down.
6. ஆடை ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு வந்தான். Âḍei âbaraṇangaḷei tarittu-koṇḍu vanđân.	He came wearing clothes and ornaments,
7. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லாது Uḍeimiiyum varrumeiyum oru vaṛe nillâđu.	Wealth and poverty never remain in the same stay.
8. "அச்சமும் நாணமும் அறிவில்லார்க்கில்லை." "Achamum nâṇamum arrivillârkk 'illei."	"Fear and shame are not to the ignorant."
9. கல்வி உடைமை, பொருளுடைமை, என்றிரண்டு செல்வமும் செல்வம் எனப்படும். Kalvi-udaimai, poruḷ-uḍaimai, enrr 'iranḍu çelvamum çelvam enna-paḍum.	Two kinds of wealth are called wealth, viz., the possession of learning and the possession of property.
10. பிறர் தாழும் படிக்கு நீ தாழ்வு பண்ணாதே! Pirrar tâṛum paḍikku nî târvu paṇ-ṇâđe!	Don't (feign to) humble yourself in order to cause others to be humbled.
11. அவனுடைய நோக்கம் என்ன? Avanuḍaiya nôkkam enna?	What is his intention?
12. அவன் கொண்ட கருத்து வேறே Avaṇ Koṇḍa karuttu vêrrê.	His idea was different.
13. இது ஆருடைய கைஎழுத்து? Iđu âruḍaiya kai-eṛuttu?	Whose hand writing is this?
14. அதன்பாடு Ađ'un pâḍu.	That's your affair.
15. அவனவன் பாடு அவனவனுக்கு Avan-avan-pâḍu avan-avanukku.	Let each one look after his own affairs.
16. வந்த தேவரைக் கண்டு அரிச்சந்திரன் மகிழ்ந்தார். Vanđa dêvarai kaṇḍu Harichandran magiṛnđâr.	"Harichandra" rejoiced seeing the gods who had arrived.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Do not rejoice too much in prosperity, nor grieve too much in adversity.	வாழ்வில் அதிகமாய் மகிழாதே! தாழ்வில் அதிகமாய்த் துக்கப்படாதே! Vâṟvil adigamây magiṟâdê! tâṟvil adigamây dukka-paḍâdê!
2. Call the church sweeper........	கோவிற்கூட்டியைக் கூப்பிடு. Kôvil-kûṭṭiyai kuppiḍu.
3. Neither praise nor blame effects the dead.	புகழ்ச்சியும் இகழ்ச்சியும் இறந்தவர்களுக்கில்லை. Pugaṟççiyum igaṟççiyum irrandavargaḷukk'illei.
4. The household are much delighted because a son is born.	மகன் பிறந்தான் என்று வீட்டார் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள். Magan pirrandân enrru vîṭṭâr migavum çandôshapaḍugirrârgaḷ.
5. They all fought in the jungle.	அவர்கள் எல்லாரும் காட்டிலே போராடினார்கள். Avargaḷ ellârum kâṭṭilê pôrâḍinârgaḷ.
6. Do not neglect learning.........	கல்வியை அசட்டைபண்ணாதே. Kalviyai açaṭṭai paṇṇâdê.
7. The young should not kill birds.	சிறுவர் பறவைகளைக் கொல்லக்கூடாது. Çirruvar parravaigaḷai kolla kûḍâdu.
8. What is the intention of this verse?	இந்த வசனத்தின் கருத்து என்ன? Inda vaçanattin (kaviyin) karutt' enna?
9. What is the meaning of this word?	இந்தச் சொல்லுக்கு அர்த்தம் என்ன? Inda çollukku arttam enna?
10. What is the substance of this sentence?	இந்த வாக்கியத்தின் பொருள் என்ன? Inda vâkkyattin poruḷ enna?
11. What is the purport of the letter he has written?	அவன் எழுதின காகிதத்தின் நோக்கம் என்ன? Avan eṟudina kâgidattin nôkkam enna?
12. This is a fatal affair............	இது கெடுதியான காரியம். Idu keḍudiyâna kâryam.
13. He is a very forgetful person.	அவனுக்கு மறதி மெத்த. Avanukku marradi metta.
14. So I hear!.....................	எனக்கு அப்படிக் கேள்வி. Enakku appaḍi kêḷvi.

EXERCISE 59.

TAMIL.	ENGLISH.
195. *(a.)*	
1. ஓகோ, பிள்ளாய்! என்ன காரியஞ் செய்தாய்? Ohô ! piḷḷây ! enna kâryam çeydây?	Oh my child ! what hast thou done ?
2. இப்படி மதிமோசம் போகலாமா? Ippaḍi maḍi-môçam pôgalâmâ ?	Is it right to act thus senselessly ?
3. நியாயசூட்சமம் அறிகிறது தேவர்களுக்கும் எளிதல்லவே. Nyâya çûḍçamum arrigirradu dê-vargaḷukkum eḷid'allavê.	The minutiae (of the administration) of justice are not known easily even to the gods.
4. சற்றே பிசகினால் அதிக பாவம் விளையுமே. Çattê piçaginâl adiga pâvam viḷei-yumê.	If you only err a little much sin will be the result. *(Spring up.)*
5. ஓய், நியாயாதிபதியே! இவள் மிகவும் மோசக்காரி. Ôy ! nyâyâdipadiyê ! ivaḷ migavum môçakkâri.	O judge ! she is a very deceitful woman.
6. இவன் அல்லோ அப்படிச் சொன்னவன்? Ivan allô appaḍi çonnavan ?	It is he is it not who said so ?
7. அதுதான் காரியம்! .... Adu dân kâryam !	That is the very thing.
8. "எங்கும் நிறைந்தே இருக்கின்ற சோதி." "Engum nirreindê irukkinrra jôdi."	"The light which is everywhere diffused."
9. ஏன் பாட்டி அழுகிறாய்? .... Ên pâṭṭi aṛugirrây ?	Why do you cry, grandmother ?
10. ஏண்டா அப்படிச் செய்கிறாய்? .... Êṇḍâ appaḍi çeygirrây ?	You fellow, why are you doing so ?
11. நீயார் அடா, என்று கேட்டான்.... Nî yâr aḍâ enrru kêṭṭân.	He said who are you, you fellow.
12. இதென்ன அதிசயம்! .... Id'enna adiçayam !	What a marvel is this ?
13. இதோ தெரியப்படுத்துகிறேன்.... Idô teriya-paduttugirrên.	Very well I'll let you know.
14. ஏன் அப்பா, இந்நேரம்? .... Ên appâ, innêram ?	Why my good fellow so long ?
15. அவன் ஐயையோ என்று கூவி அழுதான். Avan Aiyaiyô enrru kûvi aṛudân.	He cried alas ! and wept.
16. சீ, இவ்வளவுதானா? .... Çî, ivvaḷavu tânâ ?	Tush ! only so much ?
17. இதோ தங்களிடத்தில் வந்திருக்கிறாரே, வித்துவான். Idô tangaḷiḍattil vand'irukkirrârê, vittuvân.	Behold this learned man who has come to you.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Well, is it not ten o'clock........	என்ன காணும் பத்துமணி ஆகவில்லையா? Enna kâṇum, pattu mâṇi âga illaiyâ?
2. Alas! I am deceived what shall I do!	ஐயையோ, மோசம்போனேன் என்ன செய்வேன்? Aiyaiyô, môçam pônên enna çeyvên?
3. My mother..........	என் தாயார். En tâyâr.
4. Which is the way to Tanjore (தஞ்சாவூர்)?	தஞ்சாவூருக்குப் பாதை எது? Tanjâvûrukku pâdai edu ?
5. This boy is the clever fellow!	இவன்தான் கெட்டிக்காரன். Ivan tân geṭṭi-kâran.
6. So this is the learned man you mentioned.	நீர் சொன்ன வித்துவான் இவர்தான் ஆக்கும். Nîr çonna vituvân ivar tân âkkum.
7. Here's a rupee for you.........	இந்தா, ஒரு ரூபாய் உனக்கு. Indâ, oru rûpây unakku.
8. I will come myself.......	நானே வருகிறேன். Nânê varugirrên.
9. Hallo, gardener, come here.....	ஓய் தோட்டக்காரா இங்கே வா. Ôy tôṭṭa-kârâ, ingê vâ.
10. I suppose that physician was your father.	அந்த வைத்தியன் உம்முடைய தகப்பன் ஆக்கும் என்று நினைக்கிறேன். Anda veittiyan ummuḍeiya tagappan âkkum enrru nineikkirrên.
11. Stop a bit your fellow!........	சற்றே நில் அடா! Çattê nil aḍâ !
12. He's a great scamp............	அவன் மிக மோசக்காரன். Avan miga môça-kâran.
13. Alas, nothing has grown in my field.	ஐயோ, என் வயலில் ஒன்றும் விளையவில்லையே. Aiyô, en vayalil onrrum viḷeiya illaiyê.

Compare 3rd. Grammar 117.

EXERCISE 60.

TAMIL.	ENGLISH.
198. *(a.)*	
1. இராஜோபசாரங்கள் தனக்கு நடந்து வருகிறதிலும் அவ்விடையனுக்கு நாளுக்கு நாள் அதிகமாக நடந்து வரும்படியாகத் திட்டஞ்செய்தான். Irâjôbaçârangaḷ tanakku naḍanđu varugirrađilum avviḍaiyanukku nâḷukku nâḷ ađigamâga naḍanđu varum paḍiyâga tiṭṭam çeyđân.	He caused more kingly honors to be paid from day to day, to the herdsman, than were accustomed to be paid to himself.
2. சுவாமி, அடியேனுக்கு அதைவிடப் பெரிதான காரியம் ஒன்றும் இல்லை. Swâmi, aḍiyênukku ađai viḍa periđâna kâryam onrrum illai.	My Lord there is nothing greater than that.
3. இவன்தான் இருக்கிறவர்களுக்குள்ளே பரம யோக்கியன். Ivan tân irrukkirravargaḷukkuḷḷê parama yôkkyan.	He indeed among those present, is a superlatively honest man.
4. "ஓதலின்நன்றே(ன்+ந=ன்)வேதியர்க் கொழுக்கம்."=பிராமணருக்கு ஆசாரமானது வேதத்தைப் படிக்கிறதிலும் நன்மையாம். "Ôđalin nanrrê vêđiyarkk' oṛukkam." (brâmaṇarukku âçâramânađu vêđattai paḍikkirrađilum nanmaiâm.)	Consistent deportment (behaviour) is greater than learning to Brâhmans.
5. உன்னிலும் பதின்மணங்கு(மடங்கு) அதிகமாகக் காப்பாற்றுவேன். Unnilum pađin maṇangu ađigamâga kâppâttuvên.	I will take care of them ten times more than you will do.
6. "தந்தைசொல்மிக்கமந்திரம்இல்லை." "Tanđei-çol mikka manđiram illai."	"There is no charm like a father's word"
7. தாயில் சிறந்த ஒருகோயிலும் இல்லை. "Tâyil çirranđa oru kôyilum illai."	There is no temple more excellant than one's mother.
8. எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் ஆனை பெரியது; ஆனையைப்பார்க்கிலும் சிங்கம் வலியது. Ellâ mirugangaḷai pârkkilum ânai periađu; anaiyai pârkkilum çingam valiyađu.	The elephant is larger than all animals; and the lion stronger than the elephant.
9. தங்களிலும் தங்கள் பிள்ளைகள் அறிவுடையவர்களாய் இருப்பது எல்லாருக்கும் மகிழ்ச்சியைத் தரும். Tangaḷilum tangaḷ piḷḷaigaḷ arrivuḍaiyavargaḷây iruppađu ellârukkum magiṛççiyai tarum.	It is a cause of joy to all when their children are possessed of more knowledge than themselves.
10. பொய் பேசுகிறதைப் பார்க்கிலுஞ் சாகிறது ஆகிலும் நல்லது. Poy pêçugirrađai pârkkilum çâgirrađu âgilum nallađu.	It is better even to die than tell a lie.

Compare 3rd Grammar 61.

ENGLISH.	TAMIL.
(*b.*)	
1. You must learn more and more in school.	நீ மேன்மேலும் பள்ளிக்கூடத்திலே படிக்கவேண்டும். Nî mênmêlum paḷḷi-kûḍattilê paḍikka vêṇḍum.
2. In the school you must get the first of all.	பள்ளிக்கூடத்தில் நீ முதலாவது பையன் ஆகவேண்டும். Paḷḷi-kûḍattil nî muđalâvađu paiyan âga vêṇḍum.
3. He is the most stupid of all the shepherds.	இவன் இடையர் எல்லாரிலும் புத்தியீனனாயிருக்கிறான். Ivan iḍaiyar ellârilum buttiyînanây irruk-kirrân.
4. This minister is greater than the king.	இராசாவிலும் இந்த மந்தரி பெரியவன். Irâçâvilum inđa manđari periyavan.
5. It is better to work than to beg.	பிச்சையெடுக்கிறதைப்பார்க்கிலும் வேலைசெய்வது நல்லது. Piççai eḍukkirrađai pârkkilum vêlai çey-vađu nallađu.
6. There is no wealth more precious than learning.	கல்வி பொருளிலுஞ் சிறந்தபொருளில்லை. Kalvi poruḷilum çirranđa poruḷ illai.
7. She is the best of all the women in the village.	ஊரிலிருக்கிற பெண்களில் இவள்தான் நல்லவள். Ûril irukkirra peṇgaḷil ivaḷtân nallavaḷ.
8. The mother rejoices when her son is said to be wiser than others.	தன் மகன் மற்றவர்களிலும் அறிவுள்ளவன் என்று சொல்லப்படும்பொழுது தாயானவன் மகிழ்ச்சியடைகிறான். Tan magan mattavargaḷilum arrivuḷḷavan enrru çolla-paḍum poẓuđu tâyânavaḷ magiẓççi aḍeigirrâḷ.
9. The elephant is greater than the tiger; but the tiger is more cruel.	புலியிலும் ஆனை பெரிது; புலியோ கொடிது. Puliyilum ânai periđu; puliyô koḍiđu.
10. This is the heaviest burden.	இது எல்லாவற்றிலும் பாரமானது. Iđu ellâvattilum bâramânađu.
11. The son is better than the father.	தந்தையிலும் மகன் (குமாரன், பிள்ளை) நல்லவன். Tanđaiyilum magan (kumâran, piḷḷai) nallavɛn.
12. This is greater than that........	அதிலும் இது பெரிது. Ađilum iđu periđu.
13. This is sweeter than honey.....	இது தேனிலும் இனிது. Iđutênilum iniđu.

EXERCISE 61.

TAMIL.	ENGLISH.
201. (*a.*)	
1. எப்படிப்பட்ட நியாய சூட்சமத்தையும் கண்டுபிடிக்கத்தக்க புத்தியைக் கொடுப்பார். Eppaḍi-paṭṭa nyâya-çûḍchmattei-yum kaṇḍu piḍikka takka bud-dhiyei koḍuppâr.	He will give (me) sense to discover every minute affair connected with (the administration of) justice.
2. குழந்தையைக் கொன்றுபோட்டவளை அழைப்பித்து, நீ ஏன் இப்படிப்பட்ட சிசுவத்தி செய்தாய் என்று கேட்டான். Kuṛanđeiyei konrru—pôṭṭavaḷei aṛeippittu, nî ên ippaḍi-paṭṭa çiçuvatti çeyđây enrru kêṭṭân.	Having called the woman who kill-ed the child, he asked why she had committed such infanticide.
3. "எங்கணும் நீர் என்றால், இருந்தபடி உம்மை அடையாமல் நான் அங்கும் இங்கும் என்றும் அலையலாமோ?" "Engaṇum nîr enrrâl, irunđa paḍi ummei aḍeiyâmal nân angum in-gum enrrum aleiyalâmô ?"	"Since Thou art everywhere, should I wander about here and there, without attaining unto Thee, as Thou art."
4. அவன் எப்படிப்பட்டவனோ?..... Avan eppaḍi-paṭṭavanô ?	What kind of person is he ?
5. அவனைப் பார்க்க எனக்கு இச்சை உண்டு. Avanei pâṛkka enakku icchei uṇḍu.	I want to see him (Lit.)
6. எப்படி ஆகிலும் இவன் சம்மதித்ததே பெரிய காரியம். Eppaḍi âgilum, ivan çammađittađê periya kâryam.	At any rate, it is a great matter that he has consented.
7. அப்படிக்குப் பிள்ளை பிறந்திருக்கிறது. Appaḍikku piḷḷei pirranđ'irukkir-rađu.	Such a child is born.
8. பழையபடியே ஓடிப்போனான்.... Paṛeiya paḍiyê ôḍi pônân.	He ran away as before.
9. அப்படித்தான்.................... Appaḍi đân.	Just so.
10. வழக்கப்படி சும்மா திரிகிறாயே.... Vaṛakka-paḍi çummâ tirigirrâyê.	Idle as usual ! (you are wandering about idly, according to custom.)
11. தங்களுடைய இஷ்டத்தின்படி ஆகட்டும். Tanggaḷuḍeiya ishṭattinpaḍi âg'aṭṭum.	Let it be as you please.

ENGLISH.	TAMIL.
(*b.*)	
1. Did you ever see such a boy?	அப்படிப்பட்ட பையனை ஒருகாலாகிலுங்கண்டதா? Appaḍi-paṭṭa peiyanei oru-kâlâgilum kaṇḍaḋâ?
2. What is this dog good for?....	இந்த நாய் என்னத்திற்கு (நல்லது) or உதவும்? Inḋa nây ennaṭtirrku (nallaḋu)? uḋavum?
3. The more he wanders in the streets, the more will he learn evil things.	அவன் எவ்வளவுக்குத் (தெருவில்) தெருக்கள்தோறும் அலைகிறனோ, அவ்வளவுக்குத் தீமையான காரியங்களைக் கற்றுக்கொள்ளுவான். Avan evvaḷavukku (teruvil) terukkaḷ tôrrum aleigirrânô, avvaḷavukku tî-meiyâna kâryanggaḷei kattu-koḷḷu-vân.
4. What kind of people are there in the village?	ஊரிலே எப்படிப்பட்ட சனம்? (இந்த ஊர் என்ன குடி?) Ûrilê eppaḋi-paṭṭa çanam? (inḋa ûr enna kuḍi?)
5. Why did you commit such great folly?	அப்படிப்பட்ட புத்தியீனத்தை ஏன் செய்தாய்? Appaḍi-paṭṭa buddhi-înattei ên çeyḋây?
6. How can I do such an evil?......	அவ்வகையான தீமையை நான் செய்வதெப்படி? Avvageiyâna tîmeiyei nân çeyvaḋ'ep-paḍi?
7. He has gone as he was wont.....	வழக்கப்படி போய்விட்டான். Vaṛakka-paḍi pôy viṭṭân.
8. At any rate I have seized the thief.	எப்படியாகிலும் திருடனைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன். Eppaḍi âgilum tiruḍanei piḋittu-koṇḍ' irukkirrên.
9. What are such boys good for?	அப்படிப்பட்ட பையன்கள் என்னத்திற்கு? Appaḍi-paṭṭa peiyangaḷ ennattirrku?
10. They are talking just as they used to talk.	முன் (னே) இருந்த வழக்கத்தின்படியே பேசிக்கொள்ளுகிறார்கள். Munnê irunḋa vaṛakkattin paḍiyê pêçi-koḷḷugirrârgaḷ.
11. May we do such a thing?.......	இவ்விதமான காரியத்தை நாம் செய்யலாமா? Ivviḋamâna kâryattei nâm çeyyalâmâ?
12. What kind of things may we do?	நாங்கள் எவ்வகைக் காரியங்களைச் செய்யலாம்? Nângaḷ evvagei-kâryanggaḷei çeyyalâm?
13. Oho? is he such a fool?.......	ஓகோ! அவன் அத்தனைக்கு மதிகேடனா? Ohô! avan attaneikku maḋi-kêḍanâ?
14. Such an one came..............	இன்னான் வந்தான். Innân vanḋân.

EXERCISE 62.

TAMIL.	ENGLISH.
204. *(a.)*	
1. என் கண்களே அல்லாமல் வேறே சாட்சி இல்லை. En kaṇgaḷê allâmal vêrrê çâdçi illei.	There is no witness but my own eyes.
2. சிவம் அன்றி வேறே வேண்டாதே! Çivam anrri vêrrê vêṇḍâđê!	Desire nothing but the Supreme Being (God.)
3. அதல்லாமல் இன்னம் வேறே உண்டா? Ađ'allâmal innam vêrrê uṇḍâ?	Is there anything besides that?
4. சோதிக்கும்பொருட்டு உனக்குச் சொன்னதே அல்லாமல் வேறில்லை. Çôđikkum poruṭṭu unakku çonnađê allâmal vêrr'illei.	I only said so to try you (to examine you literally.)
5. உனக்கு வேண்டுவதைக் கேள்?.... Unakku vêṇḍuvađei kêl?	Ask what you want?
6. அதை யாதொரு தடையும் இல்லாமற் கொடுப்பேன் என்றார். Ađei yâđ'oru taḍeiyum illâmal koḍuppên enrrâr.	He said he would give without any difficult.
7. அதுவும் அன்றி (அன்னியில்) அவனுடைய தாயாரையும் அழைப்பித்தார். Ađuvum anrri (anniyiḷ) avanuḍeiya tâyâreiyum aṛeippittâr.	Moreover he called his mother.
8. என் விதியை நான் தொலைக்க வேண்டுமே அல்லாமல், உமக்குக் காரியம் என்ன? En viđiyei nân toleikka vèṇḍumê allâmal, umakku kâryam enna?	I must fulfil my destiny; what is it to you?
9. உன்னையல்லாமல் யார் வந்தார்கள்? Unnei allâmal yâr vanđârgaḷ?	Who came beside you? (Lit. *without you who came*).
10. ஒரு பிரயாசமுமின்றி உனக்குக் கிடைக்கும். Oru prayâçamum inrri unakku kiḍeikkum.	Without any difficulty you will obtain it.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. This child is the only witness, there is no other.	இந்தப் பிள்ளையே அல்லாமல் வேறே சாட்சியில்லை. Inda piḷḷeiyê allâmal vêrrê çâḍçi illei.
2. Will anything grow without water?	தண்ணீர் இன்றி யாதொன்றும் விளையுமோ? Taṇṇîr inrri yâd'onrrum viḷeiyumô?
3. This seed will grow but not that stone.	இந்த விதை முளைக்குமேயல்லாமல் அந்தக் கல் முளைக்குமா? முளையாது. Inda videi muḷeikkumê allâmal, anda kal muḷeikkumâ?
4. Are there any besides this?....	இதல்லாமல் வேறே உண்டா? Id'allâmal vêrrê uṇḍâ?
5. Will they come with it?........	அதில்லாமல் வருவார்களா? Ad'illâmal varuvârgaḷâ?
6. He must learn his lessons: what else?	அவன் பாடங்களைப் படிக்கவேண்டுமே; பின்னென்ன? Avan pâḍanggaḷei paḍikka vêṇḍumê; pin enna?
7. He troubles me without any cause whatever.	யாதொரு முகாந்தரமுமின்றி என்னை வருத்தப்படுத்துகிறான். Yâd'oru mugândiramum inrri ennei varutta paḍugirrârgaḷ.
8. I have told you one thing: besides that there is another which no one knows but myself.	உனக்கு ஒருகாரியஞ் சொன்னேன்; அதல்லாமலும் எனக்கே அல்லாமல் வேறொருவருக்கும் தெரியாத காரியம் ஒன்றுண்டு. Unakku oru kâryam çonnên; ad'allâmalum enakkê allâmal vêrr'oruvarukkum teriyâda kâryam onrr'uṇḍu.
9. The people are suffering from the lack of true wisdom.	மெய்ஞ்ஞானமில்லாமல் சனங்கள் வருத்தப்படுகிறார்கள். Meyñânam illâmal çananggaḷ varuttapaḍugirrârgal.
10. They are wandering about without any light.	வெளிச்சம் இன்றி அலைந்து திரிகிறார்கள். Veḷicham inrri aleindu tirigirrârgaḷ.
11. It is hard to live without sin..	பாவமின்றி (செய்யாமல்) நடக்கிறது அரிது. Pâvam inrri (çeyyâmal) naḍakkirradu aridu.
12. Come without delay!..........	தாமதமின்றி வா! Tâmadam inrri vâ!
13. If there should be no water....	தண்ணீர் இல்லாமற் போனால். Taṇṇîr illâmal pônâl.

EXERCISE 63.

TAMIL.	ENGLISH.
207. (*a.*)	
1. உங்களில் யாருக்காவது சாட்சி உண்டோ? Unggaḷil yârukk'âvađu çâḍçi uṇdô?	Has any one of you any evidence?
2. உன்னுடைய யானை ஆகஸ்மீகமாகச் செத்துப்போச்சுது (போயிற்று.) Unnuḍeiya yanei âgaçmîgamâga çettu pôççuđu.	Your elephant died without any apparent cause.
3. அதற்கு விலையானாலும், பதிலாக யானையானாலும் உனக்குக் கொடுக்கிறேன். Ađarrku vilei ânâlum, bađilâga yânei ânâlum unakku koḍukkirrên.	I will give you its price, or another elephant instead of it.
4. தெய்வீகமாக நேரிட்டபடியால் பதிலாக யானையானாலும் வாங்கிக்கொள், அல்லது விலையானாலும் வாங்கிக்கொள். Deyvîgamâga nêriṭṭa paḍiyâl bađilâga yânei ânâlum vânggi-koḷ, allađu vilei ânâlum vâng-gi-koḷ.	Since it happened by Divine appointment either take an elephant instead of it, or the value of it.
5. நீங்கள் நாளையத்தினமாவது நாளையின் அன்றைக்காவது வாருங்கள். Nînggaḷ nâḷeiyattinamâvađu, nâḷeiyin anrreikk'âvađu vârungga].	Come either to-morrow or the day after.
6. "இல்லறம் அல்லது, நல்லறம் அல்ல." "Il-arram allađu, nal-arram alla."	"There is no real virtue but domestic virtue."
7. பரிகாசமாக விளையாடினோம் அல்லது, இரத்தினம் விழுங்கினதில்லை. Parigâçamâga viḷei-âḍinôm allađu, irattinam viṛungginađ'illei.	We only played for sport: we've swallowed no jewel.
8. வருகிறையோ, (வருகிறாயோ) இல்லையோ? Varugirreiyô, (varugirrâyô) illeiyô?	Will you come or not?

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Either this or that must be true?	இதாவது அதாவது மெய்யாயிருக்கவேண்டும். Iđ'âvađu ađ'âvađu meyyây irukka vêṇḍum.
2. Either he is guilty or the witness is speaking falsely.	ஒன்றில் இவன் குற்றவாளி, ஒன்றில் இந்தச் சாட்சிக்காரன் பொய்பேசுகிறான். Onrril ivan kuttavâḷi, onrril inđa çâḍçi-kâran poy pêçugirrân.
3. Come to-morrow, or else I will punish you.	நாளைக்குவா, மற்றப்படி உன்னை தண்டிப்பேன். Nâḷeikkuvâ, matta-paḍi unnei daṇḍippên.
4. Bring me either a horse or a bandy or an elephant.	குதிரையையாவது, பண்டியையாவது, ஆனையையாவது எனக்குக் கொண்டுவா. Kuđireiyei âvađu, baṇḍiyei âvađu, âneiyei âvađu, enakku koṇḍu-vâ.
5. Give it to some one or other.....	ஆருக்காவது கொடு. Arukk'âvađu koḍu.
6. Put some one in your place, or I must fine you.	பதிலாக ஒருவனை வை, மற்றப்படி உனக்கு அபராதம் போடுவேன். Bađilâga oruvanei vei, matta-paḍi unakku abarâđam pôḍuvên.
7. This, at least, you will acknowledge.	இதாவது மெய்யென்று ஒத்துக்கொள்ளவேண்டும். Id'âvadu mey enrru ottu-koḷḷa-vêṇḍum.
8. They either suffer from the absence of rain or from some other cause.	மழையில்லாமையினாலாவது, வேறே யாதொரு முகாந்தரத்தினாலாவது வருத்தப்படுகிறார்கள். Maṛei illâmeiyinâlâvađu, vêrrê yâđ'oru mugândirattinâl âvadu, varutta-paḍugirrârgaḷ.
9. I am a learned man and not a merchant.	நான் வித்துவானே அல்லது, வர்த்தகன் அல்ல. Nân vittuvânê allađu, varttagan alla.

EXERCISE 64.

TAMIL.	ENGLISH.
210. (a.)	
1. நான் இவனிடத்தில் கடன்வாங்கினதும் இல்லை, சீட்டைக் கிழித்ததும் இல்லை. Nâṉ ivaniḍattil kaḍan vânggina-ḍum illei, çîṭṭei kiṟittađum illei.	Neither borrowed anything from him, nor tore the note.
2. நான் அந்தக் காரியத்தைச் சொன்னவனும் அல்ல, செய்தவனும் அல்ல. Nân anđa-kâryattei çonnavanum alla, çeyđavanum alla.	I am not the man that said that nor the man that did that.
3. அந்த பூ சிவப்பும் அல்ல, மஞ்சள் நிறமும் அல்ல. Inđa pû çivappum alla, mançaḷ-nirranıumalla.	That flower is not red not yet (of all yellow colour.)
4. அவர் ஞானியும் அல்ல, மந்திரியும் அல்ல......... Avar gnâniyum alla, manđiriyum alla.	He is neither a counsellor nor a wise man.
5. அதுவும் வரவில்லை, இதுவும் போகவில்லை......... Ađuvum varavillei, iđuvum pôga illei.	That has not come, nor has this gone.
6. பலபெயரிடத்தில் விசாரிக்கும்பொழுது இவன் சொன்னது நிசம் என்று தோன்றவும் இல்லை, அவன் மனம் அறிந்து பொய் பேசினன் என்று தோன்றவும் இல்லை. Pala peyariḍattil viçârikkum po-ṟuđu, ivan çonnađu niçam enrru tônrravum illei, avan manam ar-rinđu poy pêçinân enrrụ tônrra-vum illei.	When (we) enquire of many persons it does not appear that what he said is true,nor that be has wilfully told a falsehood.
7. நீ ஆவது அவன் ஆவது இரண்டுபேரில் ஒருவன் ஒதுங்கிப்போகவேண்டும். Nî âvađu avan âvađu iraṇḍu pê-ril oruvan ođunggi pôga vêṇḍum.	One of you must go aside, either you or he.
8. மழை அல்ல, இடி அல்ல, எப்படியும் போகவேண்டியது. Maṟei alla, iḍi alla, eppaḍiyum pôga vêṇḍiyađu.	There is no rain, or thunderbolt ; you must go at any rate.
9. ஆறல்ல, நூறல்ல, எவ்வளவு செலவானாலும் ஆகட்டும். Ârr'alla, nûrr'alla, evvaḷavu çelav' ânâlum âg'âṭṭum.	I do not say six, or a hundred : let it cost what it will.
10. இதுவுமில்லை, அதுவுமில்லை, இரண்டுமில்லை..... Iđuvum illei, ađuvum illei, iraṇḍum illei.	Nor this or that: neither of the two.
11. அரிசி உண்டானல் வரிசையுமுண்டு......... Ariçi uṇḍ'ânâl variçeiyum uṇḍu.	"Where there is rice there is rank."
12. அரிசியுமில்லை, வரிசையும் இல்லை. Ariçiyumillei, variçeiyum illei.	There is neither rice nor rank.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Neither the king nor any of his counsellors were present.	இராசாவும் அங்கே இல்லை, அவருடைய மந்திரிகளில் ஒருவனும் அங்கே இல்லை. Irâçâvum anggê illei, avarudeiya mandirigaḷil oruvanum anggê illei.
2. This was known to neither the watchman of the village nor to the inhabitants.	இது கிராமத்துக் காவற்காரனுக்குத் தெரியாது, ஊராருக்கும் தெரியாது. Idu krâmattu-kâval-kâranukku teriyâdu, ûrârukkum teriyâdu.
3. The book is neither here nor there.	அந்தப் புஸ்தகம் இங்குமில்லை, அங்குமில்லை. Anda puçtagam inggum illei, anggum illei.
4. Neither of these is sweet.	இந்த இரண்டும் தித்திப்பல்ல. Inda iraṇḍum tittipp'alla.
5. Neither has the physician come, nor has he sent his servant.	வைத்தியன் வரவுமில்லை, வேலைக்காரனை அனுப்பவுமில்லை. Veittiyan varavumillei, vêlei-kâranei anuppavum illei.
6. He has neither friends nor relations in the village.	அவனுக்கு ஊரிலே சிநேகிதருமில்லை, உறவின்முறையாருமில்லை. Avanukku ûrilê çinêgidarum illei, urravin-murreiyârum illei.
7. Neither of these will yield to the other.	இவர்களில் ஒருவனும் மற்றவனுக்கு இடங்கொடுக்கமாட்டான். Ivargaḷil oruvanum mattavanukku iḍam kodukka mâṭṭân.
8. I cannot quite believe what either the plaintiff, or the defendant, or the witnesses of the peon say.	வாதி சொல்லுகிறதாவது, பிரதிவாதி சொல்லுகிறதாவது, சேவகரின் சாட்சிக்காரர் சொல்லுகிறதாவது எனக்கு நிசம் என்று தோன்றுகிறதில்லை. Vâdi çollugirrad'âvadu, prativâdi çollugirrad'âvadu çêvagarin çâḍçikârar çollugirrad'âvadu enakku niçam enrru tônrrugirrad'illei.

EXERCISE 65.

TAMIL.	ENGLISH.
213. *(a.)*	
1. கூடினமட்டும் பிரயாசப்படு............ Kûḍina maṭṭum prayâça-paḍu.	Exert yourself as much as you can.
2. இதுகளை நான் வரும் அளவும் காப்பாற்றி வை... Iđugaḷai nân varum aḷavum kâppâtti vai.	Take care of these till I come.
3. என்னால் ஆகிற வரைக்கும்............ Ennâl âgirra vareikkum.	As far or long as I can.
4. "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு"........ Âttira-kâranukku buddhi maṭṭu.	The sense of a rash man is deficient.
5. எலுமிச்சங்காய் அத்தனை சாதம் போட்டான்...... Elumiççangkây attanei çâđam pôṭṭân.	She put (before him) boiled rice, the size of a lime.
6. நெல்லையாகிலும் கொடு, இல்லாவிட்டால் ஒருமாதம் வரைக்கும் அவன் போடுகிற சாதத்தை ஆகிலும் சாப்பிட்டுக்கொண்டிரு. Nellai âgilum koḍu, illâ viṭṭâl oru mâđam vareikkum avan pôḍugirra câđattai âgilum çâppiṭṭu koṇḍ'iru.	Give paddy, or if not eat for a month the boiled rice which he provides.
7. போகக் கூடாதென்று வேண்டியமட்டுக்கும் சொன்னாள். Pôga kûḍâđ'enrru vêṇḍiya maṭṭukkum çonnâḷ.	She gave him (sufficient) warning not to go.
8. நான் எவ்வளவு?.................. Nân evvaḷavu ?	What am I. (Look how much am I.)
9. இப்பஞ்சையின்மேல் இப்படியாக வரலாமா?..... Ippançaiyin mêl ippaḍiyâga varalâmâ ?	Is it right to come down upon so weak a person (this cotton)?
10. பத்துவயது முதலாக முப்பதுவரைக்கும் தர்க்கசாஸ்திரம் ஒன்றையே கற்றுக்கொண்டான். Pattu vayađu muđalâga muppađu varaikkum tarkka-sâstram onrraiyê kattu koṇḍân.	He learned only logic from two years old to thirty.
11. அந்தமட்டுக்கும் ஏற்றம் நிற்குமோ? எப்படி, என்றான். Anđa maṭṭukkum êttam nirrkumô? eppadi, enrrân.	Will the rice stop there ? What do you think, said he ?
12. அந்தமட்டும் நான் ஏறி மிதிக்கிறேன் என்றார்..... Anđa maṭṭum nân êrri miđikkirrên enrrâr.	So long I will ascend and tread (the picota) he said.
13. தாய் வரும் அளவும் பேச்சிழுத்தாள்........... Tây varum aḷavum pêçç' iṛuttâḷ.	She prolonged speech till the mother comes.
14. அதற்களவில்லை...... Ađark' aḷav'illei.	It is immeasurable.
15. இவ்வளவென்றில்லை........ Ivvaḷav'enrr'illai.	You cant say how much.
16. நேற்றை அளவிலே செய்தி இப்படி......... Nêttai aḷavilê çeyđi ippaḍi.	Till yesterday this was (all) the news.
17. இற்றைவரைக்கும்.................. Ittai varaikkum.	Until to-day.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. As long as we all live we must labor patiently and diligently.	நாம் எல்லாரும் உயிருள்ளளவும் பொறுமையோடும் சுறுசுறுப்போடும் உழைக்க வேண்டும். Nâm ellârum uyiruḷḷ'aḷavum porrumeiyôḍum çurruçurruppôḍum uṛeikka vêṇḍum.
2. I will not yield a jot of what I claim.	நான் கேட்கிறதில் எள்ளளவும் தள்ளிக் கொடுக்கமாட்டேன். Nân kêṭkirradil eḷḷ'aḷavum taḷḷi koḍukka mâṭṭên.
3. He was up to the chin in water.	இவன் மோவாய்க்கட்டைவரைக்கும் தண்ணீரில் நின்றான். Ivan môvây-kaṭṭei vareikkum taṇṇîril ninrrân.
4. This much I have borne........	இம்மட்டும் சகித்துக்கொண்டேன். Immaṭṭum çagittu koṇḍên.
5. At least take up this little burden.	இந்தச் சிறு பாரத்தை ஆகிலும் எடு. Inda çirru bârattei âgilum eḍu.
6. Be thou faithful unto death.....	மரணபரியந்தம்உண்மையுள்ளவனாயிரு. Maraṇa pariyandam uṇmei uḷḷavanây iru.
7. It is as large as a lime..........	அது எலுமிச்சங்காய் அளவிருக்கிறது. Adu elumiççamkây aḷav'irakkirradu.
8. I will wait till to-morrow........	நாளைவரைக்கும் காத்திருப்பேன். Nâḷei vareikkum kâtt'iruppên.
9. I will do what I can..............	என்னாலானமட்டும் செய்கிறேன். Ennâl âna maṭṭum çey-girrên.
10. From the time the learned man came until now I've been thinking about the matter.	அந்த வித்துவான் வந்தது முதற்கொண்டு இதுவரைக்கும் அக்காரியத்தைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். Anda vittuvân vandadu mudal koṇḍu idu vareikkum akkâryattei çindittu koṇḍ'irukkirrên.
11. His wisdom is immeasurable.....	அவருடைய ஞானத்துக்கு அளவில்லை. Avaruḍeiya gnânattukku aḷav'illei.
12. Until to-day......................	இன்றளவும் or (இன்றைவரைக்கும்). Inrr'aḷavum (inrrei vareikkum.)

EXERCISE. 66.

TAMIL.	ENGLISH.
216. (a.)	
1. ஓயாமற் பொய் சொல்லுகிறவர்களும், நல்லோரை நிந்திக்கிறவர்களும், பெற்ற தாயாரை வைகிறவர்களும், ஆயிரஞ்சதிகளைச் செய்பவர்களும், சாஸ்திரங்களை ஆராயாதவர்களும், பிறர்க்கு உபகாரஞ் செய்யாதவர்களும், தங்களை அண்டினவர்களுக்கு ஒன்றும் கொடாதவர்களும் இருந்தென்ன, போயென்ன? Ôyâmal poy çollugirravargaḷum, nallôrei nindikkirravargaḷum, petta tâyârei veigirravargaḷum, âyiram çadigaḷei çeybavargaḷum, sâstiranggaḷei ârâyâdavargaḷum, pirrarkku ubagâram çeyyâdavargaḷum tanggaḷei aṇḍinavargaḷukku onrrum koḍâdavargaḷum irund'enna, pôy enna?	What matters it whether they live or die, who always tell lies, speak evil of the good, revile the mother that bore them, form a thousand deceitful plans, do not study sciences, do not confer benefits on others and give nothing to those who draw near to them.
2. "ஓயாதோ என் கவலை? உள்ளே ஆனந்தவெள்ளம் பாயாதோ?" Ôyâdô en kavalei? uḷḷê ananda veḷḷam pâyâdô?	Will my anxieties never cease? within (my soul) will not the flood of bliss run.
3. ஏனோ தானோ என்றிருக்கிறான்... Ênô tânô enrr'irukkirrân.	He is utterly careless.
4. அதின் அழகை என்னென்று சொல்லுவேன்?... Adin aṛagei en enrru çolluvên?	How can I describe its beauty?
5. அதென்னவோ?... Ad'ennavô?	What in the world is that?
6. நீங்கள் வேட்டை ஆடி இளைத்துக் களைத்துப்போவானேன்? Nînggaḷ vêṭṭei âḍi iḷeittu kaḷeittu pôvânên?	Why do you weary yourself out with hunting.
7. நீ ஏன் துக்கிக்கிறாய்?... Nî ên tukkikkirrây?	Why do you grieve?
8. உனக்கென்ன குறைபாடு?... Unakk'enna kurreipâḍu?	What do you lack?
9. உனக்கவன் என்ன வேண்டும்?... Unakk'avan enna vêṇḍum?	What (relation) is he to you?
10. ஆறு சுவையோடு உண்டால் என்ன? அற்பமாம் கூழைக் குடித்தால் என்ன? Ârru çuveiyôḍu uṇḍâl enna? arpamâm kûṛei kuḍittâl enna?	What (matters it) though you eat (food) with the sex (kinds of flavor; or if you drink this conjee.
11. எல்லாந்தெரிந்தவர்களுக்குச் சொல்வானேன்?... Ellâm terindavargaḷukku çolvânên?	Why (should one) explain a matter to those who know all things?
12. என் மரத்தின்மேல் ஏன் ஏறினாய்?... En marattin mêl ên êrrinây?	Why did you climb my tree?
13. ஏன் என்பாரில்லை... Ên enbâr illei.	There are none who care (about it.)

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Why do you do this ?..........	ஏன் இதைச் செய்கிறாய்? Ên iđei çeygirrây ?
2. He will not give because he has no money	அவனுக்குப் பணம் இல்லாததினால் கொடுக்கமாட்டான். Avanukku paṇam illâđađinâl koḍukka mâṭṭân.
3. He will not give even a grain of hemp seed.	எள்ளாகிலும் கொடான். Eḷ âgilum koḍân.
4. Give me a little water at least.	கொஞ்சம் தண்ணீராகிலும் கொடு. Konçam taṇṇîr âgilum koḍu.
5. You must examine those who claim relationship ; for they seem to be deceivers.	உறவாடுகிறவர்களைச் சோதிக்கவேண்டும்; ஏன் என்றால், அவர்கள் மோசக்காரர் என்று தோன்றுகிறது. Urrav'âḍugirravargaḷei çôđikka vêṇḍum ; ên enrrâl, avargaḷ môçakkarar enrru tônrrugirrađu.
6. It rushes on without ceasing......	அது ஓயாமல் பாய்ந்து ஓடுகிறது. Ađu ôyâmal pâynđu ôḍugirrađu.
7. Draw near to the Giver of blessedness.	ஆநந்தத்தைத் தருகிறவரண்டைச் சேரு. Ânanđattei tarugirravar aṇḍei çêru.
8. What is all this noise about ?.....	இந்தச் சந்தடி எல்லாம் என்ன? Inđa çanđaḍi ellâm enna ?
9. What matters it whether such people come or go ?	அப்பேர்பட்டவர்கள் போனாலும் என்ன, வந்தாலும் என்ன? Appêr-paṭṭavargaḷ pônâlum enna, vanđâlum enna ?
10. Please give me that money......	அந்தப் பணத்தைத் தாருமேன். Anđa paṇattei târumên.

EXERCISE 67.

TAMIL.	ENGLISH.
219. *(a.)*	
1. எங்கே ஆகிலும் கண்டதுண்டோ? Engê âgilum kaṇḍad'uṇḍô?	(Has any one) ever seen it any-where?
2. அந்த ஊராரைக் காத்தவன் எவனோ, அவனை நாம் அண்டிக்கொள்ள வேண்டும். Anđa ûrârei kâttavan evanô, ava-nei nâm aṇḍi-koḷḷa vêṇḍum.	We must draw near to him who-ever he is that has preserved these villagers.
3. பால் ஆகிலும் தயிர் ஆகிலும் கொடு. Pâl âgilum tayirâgilum koḍu.	Give either milk or curds.
4. மண் ஆயினும் மனை ஆயினும் காப்பாற்றினவனுக்கு உண்டு. Maṇ âyinum manei âyinum kâp-pattinavarukku uṇḍu.	Whether it be a mud house or whether it belongs to the man who has preserved it.
5. பிணியைத் தீர்ப்பது எதுவோ அதுவே மருந்து. Piṇiyei tîrppađu eđuvô ađuvê marunđu.	That is medicine which removes the disease.
6. அவரைக் கண்டது எப்போதோ, அப்போதே தெரியும் அவருடைய செய்தி. Avarei kaṇḍađu eppôđô, appôđê teriyum avaruḍeiya çeyđi.	When you see him you will know all about him.
7. ஆண் ஆகிலும் பெண் ஆகிலும் பொய் சொல்லுகிறவர்களை நம்பக் கூடாது. Âṇ âgilum peṇ âgilum poy çol-lugirravargaḷei namba kûḍâđu.	You cant trust a liar male or female.
8. யாராகட்டும் சூதாடுகிறவன் கெடுவான். Yârâgaṭṭum çûd'âḍugirravan keḍuvân.	Whosoever gambles will perish.
9. "கீழோர் ஆயினும் தாழ உரை."...... Kîṛôṛ âyinum tâṛa urei.	"Although they are people of low degree speak gently to them."
10. எப்போது அது காதுகளை நெறித்துக்கொண்டு, வாலைத் தூக்குமோ, அப்போது கொல்ல நினைத்தான். Appôđu ađu kâđugaḷei nerrittu-koṇḍu vâlei tûkkumô appôđu kolla nineittân.	Whenever it stiffens its ears, and erects its tail then it intends to kill.
11. என் மந்தையிலே ஓர் ஆட்டுக்கு இந்த வலி வந்து கோணக் கோண இழுத்து எதினாலேயும் பிழையாமற் செத்துப்போச்சு. En manđeiyilê ôr âṭṭukku inđavali vanđu kôṇa kôṇa iṛuttu eđinâlê-yum piṛaiyâmal çettu-pôççuđu.	In my flock a sheep was seized with this kind of spasm, which convulsed it, so that no medicine could afford relief and it died.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Have you seen my elder sister anywhere?	என் அக்காளை எங்கேயாகிலும் கண்டதுண்டா? En akkâḷei engê âgilum kaṇḍaď'uṇḍâ?
2. I will run away somewhere or other.	நான் எங்கேயாகிலும் ஓடிப்போவேன். Nân engê âgilum ôḍi pôvên.
3. He is hidden in some corner or other.	அவன் எங்கேயாவது ஒரு மூலையிலே ஒளித்துக்கொண்டிருக்கிறான். Avan engê âvaďu oru mûleiyilê oḷittu-koṇḍ'irukkirrân.
4. Whoever teaches well he is a Munshi.	சரியாய்க் கற்றுக்கொடுக்கிறவனே முன்ஷி. Çariyây kattu-koḍukkirravanê mun-shi.
5. Whether he be rich or poor a liar will be despised.	ஐசுவரியவான் ஆகட்டும், எளியவன் ஆகட்டும் பொய்யன் இகழ்ச்சியை அடைவான். Aiswariyavân âg'aṭṭum, eḷiyavan âg'-aṭṭum poyyan igaṛççiyei aḍeivân.
6. Can a murderer escape anywhere?	கொலைக்காரன் எங்கேயாகிலும் தப்பித்துக்கொண்டோடக் கூடுமா? Kolei-kâran engê âgilum .tappittu koṇḍ'ôḍa kûḏumâ?
7. Can you tell me whether the price is what he says or not?	அவன் சொல்லுகிற விலை சரியா, இல்லையா என்று சொல்லத் தெரியுமா? Avan çollugirra vilei çariyâ, illeiyâ enrru çolla teriyumâ?
8. Although he is a young man he is a great physician.	இவன் இளையவன் ஆகிலும் பெரிய வைத்தியனாயிருக்கிறான். Ivan iḷeiyavan âgilum periya veittiya-nây irukkirrân.
9. I asked him those questions to try whether he had learnt the lesson or not.	அவன் அந்தப் பாடத்தைப் படித்திருந்தானோ, இல்லையோ என்று சோதிக்கும்பொருட்டு அந்தக் கேள்விகளைக் கேட்டேன். Avan anďa pâḍattei paḍitt'irunďânô, illeiyô enrru çôďikkum poruṭṭu anďa kêḷvigaḷei kêṭṭên.

EXERCISE 68.

TAMIL.	ENGLISH.
222. *(a.)*	
1. "கல்லாப் பிழையுங், கருதாப் பிழையுங், கசிந்துருகி நில்லாப் பிழையும், நினையாப் பிழையுங், துதியாப் பிழையுந், தொழாப் பிழையும், எல்லாப் பிழையும், பொறுத்தருள்வாய்." Kallâ piṟeiyum, karuđa piṟeiyum, kaçinđ'urugi nillâ piṟaiyum, nineiyâ piṟeiyum, tuđiyâ piṟeiyum, toṟâ piṟeiyum, ellâ piṟeiyum porrutt'aruḷvây.	"Thou wilt forgive (my) fault in not learning of thee, my fault in not thinking (of thee), my fault in not standing weeping with melting heart, my fault in not remembering (thee), my fault in not worshipping (thee) my every fault."
2. காணுமுன் நிச்சயப்படக்கூடாது. Kâṇâ mun niççaya-paḍa kûḍâđu.	You cant be sure till you've seen.
3. அதைக் கேளாமுன் நடுக்கம் வந்து விட்டது. Ađei kêḷâ mun naḍukkam vanđu viṭṭađu.	Before he heard it, trembling seized him.
4. சூரியன் தோன்றுததற்கு முன்னே வேலைக்காரர் வந்தார்கள். Çûriyan tônrrâđađarku munnê vêlei-kârar vanđârgaḷ.	The servants came before the sun appeared.
5. அவன் வராததற்குத் தடை என்ன? Avan varâđađarku taḍei enna?	What hinders is coming ?
6. அந்தப் பையன் பாடம் ஒன்றையும் படியாதபடிக்குத் திரிகிறான். Anđa peiyan pâḍam onreiyum paḍiyâđa paḍikku tirigirrân.	The boy wanders about learning no lesson.
7. அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள். Ançum mûnrrum uṇḍ'ânâl arriyâ peṇṇum karri çameippâḷ.	If there be three and five even an ignorant woman (will) can prepare curry.

Comp. 3rd Gram. 142.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Pardon my fault in not thinking of it.	அதை நான் நினையாப் பிழையை நீர் பொறுக்கவேண்டும். Ađei nân nineiyâ piṛeiyei nîr porruk-ka vêṇḍum.
2. He goes about without speaking a word.	அவன் ஒரு சொல்லுஞ் சொல்லாத படிக்குத் திரிகிறான். Avan oru çollum çollâđa paḍikku tiri-girrân.
3. Before the sun set he went to sleep.	சூரியன் அஸ்தமிக்கும் முன்னே தூங்கிவிட்டான். Çûriyan astamikkum munnê tûngî viṭ-ṭân.
4. Before I thought of that I wept.	அதை நினையாமுன் அழுதேன். Ađei nineiyâ mun aṛuđên.
5. Why does the boy go about learning no lessons?	அந்தப் பையன் பாடம் படியாதபடிக்கு என் சும்மா திரிகிறான். Anđa peiyan pâḍam paḍiyâđa paḍikku ên çummâ tirigirrân ?
6. Should any one go about doing nothing?	யாராகிலும் ஒன்றுஞ் செய்யாமல் சும்மா திரியலாமா? Yâr âgilum onrrum çeyyâmal çummâ tiriyalâmâ ?
7. He is a blockhead that understands nothing.	அவன் ஒன்றும் அறியா மூடன். Avan onrum arriyâ mûḍan.

EXERCISE 69.

TAMIL.	ENGLISH.
224. *(a.)*	
1. சின்னஞ்சிறியர்கள் செய்த மணற்சோற்றை ஒக்கும். Çinnam-çirreiyargaḷ çeyda maṇal-çôttei okkum.	It is like the sand-rice made by little children.
2. சின்னஞ்சிறுத்த இடை......... Çinnam-çirrutta iḍei.	A very slender waist.
3. கன்னங்கறுத்த முகமுள்ளவன் வந்தான். Kannam-karrutta mugamuḷḷavan vandân.	One came with a very black face.
4. பென்னம்பெருத்த புயத்தோடிருக்கிறான். Pennam-perutta buyattôd'iruk-kirrân.	He has a very large arm.
5. சின்னஞ்சிறியேன் என்னசெய்வேன்? Çinnam-çirriyên enna çeyvên ?	What shall I a very mean fellow do ?
6. தன்னந்தனியே இருந்து தயங்கினாள். Tannam-taniyê irundu tayanginâl.	He languished utterly alone.
7. செக்கச்சிவந்தவளாய் இருக்கிறாள். Çekka-çivanḍavaḷây irukkirrâḷ.	She is entirely red.
8. அந்த வயல் பச்சைப்பசத்த நிறமாய் இருக்கிறது. Anda vayal paççei-paçatta nirra-mây irukkirradu.	That field is quite green.
9. புத்தப்புதிய நெய் கொண்டுவந்திருக்கிறாள். Putta-pudiya ney koṇḍu-vand' irukkirrâḷ.	She has brought ghee, melted to-day.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. The demon's face was jet black, and he had great broad shoulders.	அந்த இராட்சதனுக்குக் கன்னங்கரிய முகமும்,பென்னம்பெருத்த புயமும் உண்டாயிருந்தது. Anda irâḍçadanukku Kannam-kariya mugamum, pennam-perutta buyamum uṇḍ'ây-irundadu.
2. She went all alone in the desert.	தன்னந்தனியே வனாந்தரத்தில் போனாள். Tannam-taniyê vanândarattil pônâl.
3. He has a very little dog...	அவனுக்குச் சின்னஞ்சிறிய நாயுண்டு. Avanukku çinnam çirriya nây uṇḍu.
4. A very black cloud hid the sun.	கன்னங்கரிய மேகஞ் சூரியனை மறைத்துப்போட்டது. Kannam-kariya mêgam Çûriyanei marreittu-pôṭṭadu.
5. Must I languish alone ?........	நான் அங்கே தன்னந்தனியே தியங்கவேண்டுமோ? Nân angê tannam-taniyê tiyanga vêṇḍumô?
6. The corn is quite green in the fields.	வயல்களில் பயிரானது பச்சைப்பசத்தது. Vayalgaḷil payirânadu paççei-paçattadu.
7. That cow is entirely red.......	அந்தப் பசு செக்கசிவத்தது. Anda paçu çekka-çivattadu.

EXERCISE 70.

TAMIL.	ENGLISH.
226. (a.)	
1. ஆற்றிலே புருஷன் முன்னும் பெண்சாதி பின்னுமாகப் போகிறபொழுது மற்றொருவன் இவர்கள் பின்னாலே இறங்கிவந்தான். Âttilê purushan munnum peṇ-çâḍi pinnumâga pôgirra poruḍu matt' oruvan ivargaḷ pinnâlê irrangi-vandân.	When the husband going before, and the wife following after, passed through the river, another person went down after them.
2. அவர்கள் வருகிறதற்கு முன்னே.. .... Avargaḷ varugirradarku munnê.	Before they come.
3. சிலநாள் போன பிற்பாடு.................... Çila nâḷ pôna pirpâḍu.	After some days.
4. அவனுக்குப் பின்னாலே திரும்பி வந்தார்கள்...... Avanukku pinnâlê tirumbi vandârgaḷ.	They turned after him.
5. சற்றிடந் தாண்டின பிற்பாடு.................. Çatt'iḍam tâṇḍina pirpâḍu.	When they had crossed over a little way.
6. என் பின்னே நீங்கள் எல்லாரும் வாருங்கள்...... En pinnê nîngaḷ ellârum vârungaḷ.	Come after me all of you.
7. "வெள்ளம் வரும் முன்னே அணை போட வேண்டும்." Veḷḷam varum munnê aṇei poḍa vêṇḍum.	"Before the flood comes, you must build the dam."
8. முன்பின் செய்கிறபடி செய்!.................. Mun-pin-çeygirra paḍi çey !	Do as others do.
9. நான் முந்திப்போகிறேன், நீ பிந்தி வரலாம்...... Nân mundi pôgirrên, nî pindi varalâm.	I will go in front, you come behind.
10. முந்தாதே!................................ Mundâdê !	Dont presume (Lit. come before or in front).
11. பின் வாங்காதே!........................... Pin vângâdê !	Dont go back.
12. முன்விட்ட காலைப் பின்விட்டுத் திரும்பினான்.... Muniṭṭa kâlei pin iṭṭu tirumbinân.	He drew back the foot he had advanced.
13. அவன் முன்னுக்கு வரமாட்டான்................ Avan munnukku vara mâṭṭân.	He will not prosper.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. The brother went before and the sister came after.	சகோதரன் முன்னும், சகோதரி பின்னுமாகப் போனார்கள். Çagôđaran muṇnum, çagôđari pinnumâga pônârgaḷ.
2. Dig your garden before the rain comes; for afterwards there will be no time.	மழை வரும் முன்னே உன் தோட்டத்தை எல்லாங் கொத்தவேண்டும்; அது வந்தபின் நேரம் இராது. Maṛei varum munnê un tôṭṭattei ellâm kotta veṇḍum ; ađu vanđa pin nêram irâđu.
3. Afterwards I heard them say so.	பிற்பாடு அவர்கள் அப்படிச் சொன்னதைக் கேட்டேன். Pirpâḍu avargaḷ appaḍi çonnađei kêṭṭên.
4. Compare the context (sentences before and after).	முன்பின் வாக்கியங்களை ஒத்துப் பார். Mun-pin-vâkkyangaḷei ottu-pâr.
5. I knew this before.............	இதை நான் முன்னர் அறிந்துகொண்டேன். Iđei nân munnar aṛrinđu-koṇḍên.
6. The criminal stood speechless before the judge.	குற்றவாளி நியாயாதிபதிக்கு முன்பாக மௌனமாய் நின்றான். Kuttavâḷi nyâyâđipađikku munbâga mounamây ninrrân.
7. There were upright judges both before and after him.	அவனுக்கு முன்னும் பின்னும் நீதியுள்ள நியாயாதிபதிகள் இருந்தார்கள். Avanukku munnum pinnum nîđiyuḷḷa nyâyâđipađigaḷ irunđârgaḷ.
8. Look well both before and behind.	முன்பின் பார்! Mun-pin-pâr!

EXERCISE 71.

TAMIL.	ENGLISH.
229. (*a.*)	
1. "தாய் இருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்விடத்தும் நீர் இருந்தும் நான் தளர்ந்து நின்றேன்." Tây irunđum piḷḷei taḷarndâl pôl evviḍattum nîr irunđum nân taḷarnđu ninrên.	Like a child who though its mother is (by its side) yet totters, so I though thou art everywhere, stand tottering?
2. கேட்டதையே சொல்லும் கிளிபோல (கிளியைப் போல). Kêṭṭađeiyê çollum kiḷi pôl (kiḷiyei pôl.)	Like a parrot that says just what it hears.
3. விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப்போலப் பிரகாசித்தது. Vilei-uyarnđa irattina-kallei pôla pragâçittađu.	It shone like a highly-valued gem.
4. அப்படி அனுப்பியதுபோல் தோன்றுகிறது....... Appaḍi anuppiyađu pôl tônrugirrađu.	It seems (he) sent.
5. மற்றவர்களைப்போல் என்னை நினைக்காதே (for நினையாதே)! Mattavargaḷei pôl ennei nineikkâđe. (nineiyâđê.)	Dont think of me as one like them.
6. நித்தியம் ஒன்றில்லாத நீர்க்குமிழிபோன்ற உடல். Nittyam onrr'illâđa nîr-kumiḻi pônrra uḍal.	The body which is like a bubble of the water, having no permanence.
7. அந்தச் சாட்சிக்காரர் மூன்றுபேருக்குள்ளே வண்ணான் துவைக்கிற கல்லைப்போலவும், அம்பட்டன் தீட்டுக்கல்லைப்போலவும், குயவன் பிடிகல்லைப்போலவும், வேறு வேறு மாதிரியாகச் செய்துகொண்டு வந்தார்கள். Anđa câḍçi-kârar mûnru pêrukkuḷḷê vaṇṇân tuveikkirra kallei pôlavum, ambaṭṭan tîṭṭu-kalle pôlavum, kuyavan piḍi-kallei pôlavum vêrru vêrru mâđiriyâga çeyđu-koṇḍu vanđârgaḷ.	Of those 3 witnesses the washerman made a pattern like a stone to beat clothes upon, the barber like a whet-stone, the potter like a stone used for smoothening his work.
8. உன்னைப் போலும் விவேகமுள்ள மந்திரி எந்தத் தேசத்திலும் கிடைப்பது மிகவும் அரிது. Unnei pôlum vivêgamuḷḷa manđiri enđa dêsattilum kiḍeippađu migavum ariđu.	It would be very hard to find in any land a counsellor like thee.
9. அக்கனியைப் போலவே இக்கனி இருக்கின்றதே. Akkaniyei pôlavê ikkani irukkinrrađê.	This fire is like that fruit.
10. "நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போற் காணுமே!" Nallâr oruvarukku çeyđa ubagâram kal mêl eḻuttu pôl kâṇumê!	"The benefit done to the good will appear like the writing on a stone."
11. இருந்தாப்போல் இருந்து வாயு வருகிறதுண்டு..... Irunđâ pôl irunđu vâyu varugirrađ' uṇḍu.	He sometimes suffers from a windy disorder which comes suddenly.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. Is there any one like him?......	அவனைப்போல ஒருவனும் உண்டா? Avanei pôla oruvanum uṇḍâ?
2. As you sent me so I will send him.	நீ என்னை அனுப்பினதுபோல நான் அவனை அனுப்புவேன். Nî ennei anuppinađu pôla nân avanei anuppuvên.
3. In color it is like saffron, in shape like the moon.	அதினுடைய நிறம் மஞ்சள்போலவும், அதன் உருவம் சந்திரனைப்போலவும் இருக்கின்றது. Ađinuḍeiya nirram mançaḷ pôlavum, ađan uruvam çanđiranei pôlavum irukkinrrađu.
4. It would be hard to find a man as sensible as the shop-keeper is.	கடைக்காரனைப்போலப் புத்திசாலி கிடைக்கிறது அரிது. Kaḍeikâranei pôla putti-çâli kiḍeikkirrađu ariḍu.
5. In fashion that garment is like the mother's.	அந்த வஸ்திரத்தினுடைய மாதிரியைப் பார்த்தால் தாயாருடையதுபோலத் தோன்றுகிறது. Anđa vastirattinuḍeiya mâđiriyei pârttâl tâyâruḍeiyađu pôla tônrrugirradu.
6. Dont think of him as of others.	மற்றவர்களைப்போல இவனை நினையாதே! Mattavargaḷei pôla ivanei nineiyâđê!
7. Suddenly the messengers came to fetch him.	இருந்தாற்போல் தூதர்வந்து இவனைக் கொண்டுபோனார்கள். Irunđâl pôl tûđar vanđu ivanei koṇḍu pônârgaḷ.
8. Is a black rock equal in value to a precious stone?	கருங்கல்லானது இரத்தினக்கல்லைப் போல் விலைஏறப்பெற்றதாயிருக்குமா? Karum kalânađu irattina-kallei pôl vilei erra pettad'ây irukkumâ?
9. Are there any counsellors as valuable as these?	இவர்களைப்போல் அருமையான மந்திரிகள் உண்டா? Ivargaḷei pôl arumeiyâna manđirigaḷ. uṇḍâ?
10. Youth is like a bubble on the water.	இளமையானது நீர்க்குமிழியைப்போலுமே. Iḷamei ânadu nîr-kumiḻi pôlumê.
11. It would be very hard to find a friend as faithful as he is.	இவரைப்போன்ற உண்மையுள்ள சிநேகிதனைக் கண்டுபிடிக்கிறது அரிதாமே. Ivarei pônrra uṇmeiyuḷḷa çinêgiđanai kaṇḍu piḍikkirrađu ariđâmê.
12. So in this case also you may judge.	அதுபோல இதையும் அறிந்துகொள்ள வேண்டியது. Ađupôla iđeiyum arrinđu koḷḷa vêṇḍiyađu.

EXERCISE 72.

TAMIL.	ENGLISH.
232. *(a.)*	
1. அவனைப் பார்த்து, இனிமேல் அப்படிச் செய்யாதே என்றான். Avanei parttu, inimêl appaḍi çeyyâdê enrrân.	He said to him, don't do so any more.
2. ஒரு மூடனைக் குறித்துச் சிபாரிசு செய்தாள்...... Oru mûḍanei kurrittu çibâriçu çeydâḷ.	She recommended a fool.
3. அந்த ராசா தன் பிள்ளைகள் படியாமல் மூடர்களாய் இருக்கிறதைக் கண்டு, வெகு விசனத்தோடே ஆலோசித்தான். Anda râçâ tan piḷḷeigaḷ paḍiyâmal mûḍargaḷây irukkirradei kaṇḍu vegu viçanattôḍê âlôçittân.	That king, seeing his sons become blockheads without learning, began to consider.
4. நீ அங்கே போய் எதைக்குறித்துப் பேசுவாய்?.... Nî angê pôy edei kurrittu pêçuvây ?	What will you talk about when you go there ?
5. சத்தத்தினாலே மாத்திரம் பயப்படல் ஆகாது...... Çattattinâlê mâttiram baya-paḍal âgâdu.	It is not right to fear a noise only.
6. கலியாணத்தைக்குறித்துக் கடன் பட்டேன்...... Kaliyâṇattei kurrittu kaḍan paṭṭên.	Went into debt on account of a marriage.
7. அவனுக்கோசரம் அதிக சிறுமைப்பட்டேன்..... Avanukk'ôçaram adiga çirramei paṭṭên.	I suffered great disgrace on his account.
8. அவனை இட்டு காரியம் எல்லாம் குந்தகமாய்ப் போய் விட்டது. Avanei iṭṭu karyam ellâm kundagamây pôy viṭṭadu.	By his means the whole affair was hindered.
9. விருதாவாய் வல்லை, ஒரு காரியத்தை வேண்டி வருகிறான். Virudâvây vallei, oru kâryattei vêṇḍi varugirrân.	He does not come for nothing; he comes for some purpose.
10. வயிற்றுப்பாட்டுக்கு வருத்தப்படுகிறான்......... Vayittu-pâṭṭukku varutta-paḍugirrân.	He suffers from hunger.
11. கல்வியைப்பற்றிக் கனபாடுபட்டேன்............ Kalviyei patti gana pâḍu paṭṭên.	I endured much for the sake of learning.
12. ஒரு முகாந்திரத்தைப்பற்றித் தங்களிடத்தில் வருவார்களே அல்லாமல் சும்மா வரமாட்டார்கள். Oru mugândirattei patti tangaḷiḍattil varuvârgaḷê allâmal çummâ vara mâṭṭârgaḷ.	They will come to you for some (private) end, and not without a purpose.

Page 137. KEY TO EXERCISE 72.

ENGLISH.	TAMIL.
(b.)	
1. I have enquired concerning it.	இதைப்பற்றி விசாரணை செய்தேன். Iđei patti viçâraṇei çeyđên.
2. He talked about the affairs of the village a long time.	நெடுநேரம் ஊர்க்காரியங்களை இட்டுப் பேசிக்கொண்டிருந்தான். Neḍu nêram ûr-kâryangaḷei iṭṭu pêçi-koṇḍ'irunđân.
3. I told you before all about it.	நான் முன்னே அந்த விவரம் எல்லாம் உமக்குச் சொன்னேன். Nân munnê anđa vivaram ellâm umakku-çonnên.
4. What will you talk about to your mother?	நீ தாயாரிடத்தில் என்னத்தைப்பற்றிப் பேசப்போகிறாய்? Nî tâyâriḍattil ennattei patti pêça pôgirrây?
5. It is said concerning this in the 3d Chapter.	மூன்றாம் அதிகாரத்தில் இதைக்குறித்துச் சொல்லப்படும். Mûnrrâm ađigarattil iđei kurrittu çolla-paḍum.
6. He has some end in view in coming to you.	ஒரு முகாந்திரத்தைப்பற்றி உங்களிடத்தில் வருகிறான். Oru mugânđirattai patti unggaḷiḍattil varugirrân.
7. What are the villagers saying about that matter?	அந்தக்காரியத்தைத்தொட்டு ஊரார் என்னசொல்லிக்கொள்ளுகிறார்கள்? Anđa kâryattei toṭṭu ûrâr enna çolli koḷḷugirrârgaḷ?
8. He addressed the king and his counsellors concerning the affairs of the country.	நாட்டுக்காரியங்களைப்பற்றி இராசாவோடும் மந்திரிகளோடும் பேசிக்கொண்டான். Nâṭṭu-kâryangaḷei patti irâcâvôḍum manđirigaḷôḍum pêçi-koṇḍân.
9. He has composed a poem about the king.	இராசாவின்பெயரில் ஒருபிரபந்தம்பண்ணிக்கொண்டிருக்கிறான். Irâçâvin peyaril oru prabanđam paṇṇi koṇḍ'irukkirrân.
10. The man is very much troubled about the means of subsistence.	இந்த மனிதன் வயிற்றுப்பாட்டுக்கு வெகுவாய் வருத்தப்படுகிறான். Inđa manidan vayittu-pâṭṭukku veguvây varutta-paḍugirrân.
11. The teacher said to him, "learn this lesson carefully."	உவாத்தியார் அவனைப்பார்த்து, "இந்தப் பாடத்தை நன்றாய்ப்படி" என்றார். Uvâttiyâr avanei pârttu, inđa pâḍattei nanrrây paḍi enrrâr.

EXERCISE 73.

TAMIL.	ENGLISH.
235. *(a.)*	
1. தேசாந்தரம் போனான்; போகும் போது ஒரு நாள் அந்த எருது கால் இடறி, விழுந்து, நொண்டி ஆயிற்று. Dèçândiram pônân ; pôgum pôdu oru nâḷ anda erudu kâl iḍarri, viṛundu, noṇḍi âyittu.	He went on his travels; while he was going, one day that bullock stumbled, fell and became lame.
2. தாகம் எடுத்துத் தண்ணீர் குடிக்கப் போனான். Dâgam eḍuttu taṇṇîr kuḍikka pônân.	He became thirsty and went to drink.
3. நாயும் பசை இல்லாத வெள்ளெலும்பைக் கௌவிக், கடித்துப், பல்லசைத்தும் பசி·தீராமல், சந்தோஷத்தை அடைகிறது. Nâyum paçei illâda veḷl'elumbei kouvi, kaḍittu, pàlaçeittum paçi tîrâmal, çandôshattei aḍeigirra-du.	And a dog, snatching a dry well-picked bone, bites it, and, though he works his teeth, yet his hunger not being appeased he is glad.
4. அரசரும் நெருப்பும் பாம்புஞ் சரி. Araçarum neruppum pâmbum çari.	Kings and fire and a snake are alike.
5. ஊரது தூரமாய் இருக்கிறது...... Ûradu dûramâ irukkirradu.	The village is far off.
6. அதைப் பார்த்து மனம்பொறாமல் பேசினான். Adei pârttu manam porrâmal pêçinân.	Seeing that he could not contain himself, he spake out.
7. பாவஞ் செய்த யாவரும் ஆக்கினை அடைவார்கள். Pâvam çeyda yâvarum âkkinei aḍeivârgaḷ.	All who have committed sin shall be punished.
8. கல்லெறிதூரம்..................... Kul-erri-dûram.	A stone's throw off.
9. ஒரு நாள் இராத்திரி............... Oru nâl irâttiri.	One night.

EXERCISE 74.

TAMIL.	ENGLISH.
238. (a.)	
1. என்னமோ பிள்ளை காலை நொண்டுகிறது...... Ennamô pillei kâlei nondugirradu.	I dont know why the child walks lame.
2. அந்தச் சிங்கத்தைச் சிநேகம் பண்ணிக்கொள்ளுகிறேன். Anda çingattei çinêgam panni kollugirrên.	I will make friends with that lion.
3. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால் கிட்டுமா? Mudavan kombu-tênukku âçei pattâl kittumâ?	If the lame man desire the honey on the end of the branch will it come nigh him.
4. சேற்றும் நீரும் மிகுந்த ஒரு பாழ்ங்கிணற்றை இதில் இருக்கிறதென்று காட்டினான். Çêrrum nîrum migunda oru pârkinatte . idil irukkinrradu enrrukâttinân.	He shewed an old well where there was much mud and water, saying "It is here."
5. எய்தவனை நோகாமல் அம்பை நோகலாமா?....... Eydavanei nôgâmal ambei nôgalâmâ?	Not being vexed with the man who shot the arrow, can you be vexed with the arrow?
6. நாயின் வாலைக் குணக்கெடுக்கலாமா?............... Nâyin vâlei kunakk'edukkalâmâ?	Can you straighten a dogs tail.
7. ஆறு கரை புரண்டு போகிறது............... Arru karei purandu pôgirradu.	The river over-flows its banks.
8. எலி வளை தோண்டக் கண்டேன்............ Eli vâlei tônda kandên.	I saw a rat digging (to dig) its hole.
9. பல் விளக்கிக் கொண்டிருந்தான்.............. Pal vilakki kond'irundân.	He was cleaning his teeth.
10. என்னை அப்படி நினைக்கவேண்டாம். .... Ennei appadi nineikka vêndâm.	Dont think so of me!
11. என்னை இப்படிச் சொல்லலாமோ?......... Ennei ippadi çollalâmô?	Is it right to speak thus of me?
12. எங்களுக்கு ஒரு தண்டனையும் இல்லாமற் காப்பாற்ற வேண்டும். Engalukku oru dandaneiyum illâmal kâppâtta vêndum.	You must protect us from all punishment.
13. அவனை இருமாதே என்று சொன்னேன்...... Avanei irumâde enru çonnên.	I told him not to cough.
14. இது நான் காடு வெட்டும் கோடாலி.......... Idu nân kâdu vettum kôdâli.	This is the axe with which I cut down the forest.
15. இராசன் கலகக்காரரைச் சிறைச்சாலையை அடைவித்தார். Irâçan kalaga-kârarei çirrei-çâleiyei adeivittâr.	The king caused the rebels to be put in prison.

EXERCISE 75.

TAMIL.	ENGLISH.
241. *(a.)*	
1. வெகு விசனத்தோடே ஆலோசிக்கத் தொடங்கினான். Vegu viçanattôḍê âlôçikka toḍanginân.	He began to consider in great sorrow.
2. இன்னும் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசையினாலே ஆலோசிக்கல் ஆனான். Innum çambâđikka vêṇḍum engirra âçeiyinâlê âlôçikkal ânân.	He began to think (urged on) by the desire of still acquiring more.
3. ஆயிசு பலத்தினாலே பிழைத்திருக்கிறது...... Âyiçu balattinâlê piṛeitt'irukkirradu.	It has survived through the strength of youth.
4. புல்லு முதலாகிய மேய்ச்சலாலே மிகவும் பெருத்துக் கொழுத்து, அந்தக் காட்டிலே திரிந்து கொண்டிருந்தது. Pullu mudalâgiya meyççalâlê migavum peruttu, koṛuttu anda kâṭṭile tirindu koṇḍ'irundadu.	It grew big through grass and other feeding waxed fat and wandered about in that jungle.
5. அவன் வாயைக் கொண்டே நிசத்தை வெளிப்படுத்தினர். Avan vâyei koṇḍê niçattei veḷipaḍuttinâr.	He made the truth manifest by his own mouth.
6. பாலோடு கலந்த நீர் பால் ஆகும் அல்லாது நீராய் நிறந்தெரியாது. Pâlôḍu kalanda nîr pâl âgum allâdu nîrây nirram teriyâdu.	Water mingled with milk will become milk, and its colour will not be known as that of water.
7. அதை விசாரிக்கிறதினால் நமக்காவதென்ன?.... Adei viçarikkirradinâl namakk' âvad'enna?	What will result from (my) explaining it?
8. யார் புகழோடு சீவிக்கிறார்களோ அவர்களே பாக்கியவான்கள். Yâr pugaṛôḍu çîvikkirrârgaḷô avargaḷê pâkkiyavângaḷ.	Whoever live with praise they are blessed.
9. "சிறு குழிகள் கொஞ்சந் தண்ணீரால் நிறையும்." Çirru kuṛigaḷ konçam taṇṇîrâl nirreiyum.	"Small pits are filled with little water."
10. பெருமையுடனே சீவிக்கிறதே நல்லது...... Perumeiyuḍanê çîvikkirradê nallada.	To live in respectability is good.
11. அவர் காலால் இட்ட வேலையை நான் தலையாற் செய்துகொள்ளுவேன். Avarkâlâl iṭṭa veleiyei nân taleiyâl çeydu koḷḷuvên.	The work he assigns me with his foot, I will do with my head.
12. எங்களாற் செய்வதென்னவென்று எண்ணினர்... Engaḷâl çeyvad'ennenna eṇṇinâr.	He considered what we had to do.
13. குடும்பத்தோடே கூடவிருந்த ஒருவன்...... Kuḍambattôḍu kuḍa irunda oruvan.	One who was with a family. *(had a family.)*

EXERCISE 76.

TAMIL.	ENGLISH.
244 (a.)	
1. ஓர் அறைக்குள்ளே....................... Ôr arreikk'uḷḷê.	Within a room.
2. அதற்குத் தகுந்த அபராதம் வாங்கி, கோழிக்காரிக்குக் கோழி பதிலுக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்தான். Ađarku tagunđa abarâđam vângi, kôŗikârikku kôŗi bađilukku koḍukkum paḍi uttaravu ceyđân.	He took a proper fine on that account, and ordered that he should give a fowl to the fowl women in place (of the one lost.)
3. அந்த வேளைக்குத் துவரம் பருப்பு எங்கும் அகப்படவில்லை. Anđa vêḷeikku tuvaram-paruppu engum agappaḍa illei.	At that time துவரை peas were not to be had anywhere.
4. எவ்வளவு தொகைக்கு வாங்கினாலும் இதுதான் எனக்குச் செலவுக்கு வேண்டும். Evvaḷavu togeikku vânginâlum iđuđân enakku çelavukku vêṇḍum.	However much you buy this only is necessary to me for expenditure.
5. என்னை இவன் என்ன செய்யலாம்?.......... Ennei ivan enna çeyyalâm?	What can he do to me?
6. எனக்குக் கோபம் வந்தது உனக்கு எப்படித் தெரியும்? Enakku kôbam vanđađu unakku eppaḍi teriyum?	How do you know I am angry?
7. இதற்கு என்ன செய்யலாம்?................. Iđarku enna çeyyalâm?	What can one do in this (emergency)?
8. நீ இதற்கு என்ன சொல்லுகிறாய்?............ Nî iđarku enna çollugirrây?	What do you say to this?
9. நாளைக்காலமே ஊருக்கு அப்புறம் கொல்லை மேட்டில் இருப்பேன். Nâlei-kâlamê ûrukku appurram kolleimêṭṭil iruppên.	To-morrow morning, I will be outside the village in the enclosure on the eminence.
10. பணத்திற்குரியவனிடத்தே பணஞ்சேர்ந்தது... Paṇattirk'uriya vaniḍatte paṇam çêrnđađu.	Money has come to the moneyed man.
11. இவனுக்கு யாதொரு கவலைக்கும் இடம் வையாமல் போஷித்துக்கொண்டு வருகிறேன். Ivanukku yâđ'oru kavaleikkum iḍam veiyâmal b'hôshittu koṇḍu varugirrên.	I support him so that he has no anxiety whatever.
12. அது பின்னடிக்கு வருத்தத்துக்கு ஏதுவாய் இருக்கும். Ađu pin aḍikku varuttattukku êđuvây irukkum.	That will be the source of future annoyance.
13. அது தாளத்துக்கு ஒத்துவரவில்லை............. Ađu tâḷattukku ottu vara illei.	That does not suit the musical time.
14. வெளிக்கு நல்லதென்றார்கள்................... Veḷikku nallađ'enrrârgaḷ.	Outwardly they said "very well."
15. ஆண்டவருடைய வாக்குக்கு எதிர்வாக்கிராது.... Aṇḍavaruḍeiya vâkkukkuedir vâkk'irâđu.	There is no reply to (my) Lord's word.
16. இரண்டுக்கும் பெரிய சண்டை விளைந்தது....... Iraṇḍukkum periya çaṇḍei viḷeinđađu.	A great quarrel arose between them.
17. நமக்கு வழி தொலைய வேண்டும்.............. Namakku vaŗi toleiya vêṇḍum.	The way must be passed on by us.
18. அதற்கு ஒரு கதையைச் சொல்லுகிறேன்...... Ađarku oru kađeiyei çollugirrên.	To that end I will relate a story.
19. இராசா வரைக்கும் தெரியப் படுத்தினான்........ Irâçâ vareikkum teriya paḍuttinân.	He made it know as far as the king. *(He caused it to reach the king's ear.)*

EXERCISE 77.

TAMIL.	ENGLISH.
247 *(a.)*	
1. தன் பிள்ளைகளை அவன் வசத்திலே ஒப்பித்தான். Tan piḷḷeigaḷei avan vaçattilê oppittân.	He delivered his children into his charge.
2. அப்படி இருக்கையில்............ Appaḍi irukkeiyil.	It being so.
3. சிங்கமானது தன் பராக்கிரமத்தால் சம்பாதிக்கப்பட்ட இராச்சியத்தைச் சுகமாக அநுபவித்துக்கொண்டிருக்கையில் அந்தக் குரங்குகளில் ஒன்று வந்தது. Çingamânađu tan parâkramattâl çambâđikka-paṭṭa irâchyattei çugamâga anubavittu koṇḍ'irukkeiyil anđa kurrangugaḷil onru vanđađu.	While the lion was comfortably enjoying the kingdom which he had acquired by his valour, one of those monkeys came.
4. இராசாவுக்கு அடுத்திருக்கையில் வெகு சனங்களுக்கு நன்மைசெய்யலாம். Irâçâvukku aḍutt'irukkeiyil vegu çanangaḷukku nanmei çeyyalâm.	While you are near the king you may confer benefits on many people.
5. இதாகிதம் தெரியாமற் கொஞ்சத்திற் சீவனம் பண்ணுவான். "Hitâhitam" teriyâmal konjattil cîvanam paṇṇuvân.	Not knowing what is proper and what is not, he will eke out a scanty subsistence.
6. மலை உச்சியில் ஒரு பெருங்கல்லை ஏற்றுதல் அரிது; அங்கிருந்து அதைத் தள்ளுதல் எளிது. Malei uççiyil oru perum kallei êttuđal ariđu, ang'irunđu ađei taḷḷuđal eḷiđu.	It is difficult to raise up a big stone to the top of a mountain; it is easy to roll it down from thence.
7. நல்ல மழை பெய்திருக்கையில் எப்படி விதையினின்று முளைகள் புறப்படுமோ, அப்படி ராசாவின் கேள்விக்கேற்க என் வாக்கினின்றும் உத்தரவு புறப்படும். Nalla maẓei peyđ'irukkeiyil eppaḍi viđeiyininru muḷeigaḷ purrapaḍumô, appaḍi râçâvin kêḷvikk'êrka en vâkkininrum uttaravu purrapaḍum.	Just as when a copious (shower) of rain has fallen, the shoots come forth from seed; so from my mouth answers suited to the king's questions spring forth.
8. மணியினின்று ஒளி பிரிக்கப்படுமோ? Maṇiyininru oḷi pirikka paḍumô?	Can radiance or brightness be separated from a gem?

EXERCISE 78.

TAMIL.	ENGLISH.
250 (a.)	
1. தண்ணீர் குடிக்க ஆற்றங்கரைக்குப் போனான். Tannîr kudikka âttankarekku pônân.	He went to the bank of the river to drink water.
2. சுவாமிகாரியஞ் செய்யாமல் இரை தேடுகிறதையே பெரிதாக நினைக்கலாமா? Swâmi-kâryam çeyyâmal irei têdugirradeiyê peridâga nineikkalâmâ?	Not doing (his) lord's business, is it right to consider the seeking of prey the great matter?
3. அவன் பக்கத்திலே உட்கார்ந்தேன். Avan pakkattilê ùdkârndên.	I sat down by his side.
4. கன்றெலும்பிருக்க அதை ரெட்டி எலும்பென்று நிச்சயித்துக்கொண்டார்கள். Kanrr'elumb'irukka adei Retti elumb'enrru niççayittu-kondargal.	Though they were calves' bones, they were certain that they were the bones of the *Retti.*
5. அந்தத் தண்ணீர் வாய்க்கால் வழியாய் ஒடிற்று. Anda tannîr vâykkâl vaṛiyây ôdittu.	That water flowed along the channels.
6. குருமொழி கேளாத சீஷன். Guru-moṛi kêlâda çîshan.	A disciple that will not obey the words of his teacher.
7. தாய்வார்த்தை கேளாத சண்டி. Tây-vârttei kêlâda çandi.	An obstinate fellow that does not hear the words of his mother.
8. மனக்கவலை மாற்றுகிறது அரிது. Mana-kavalei mâttal aridu.	It is difficult to relieve mental anxiety.
9. தாய் வீட்டுக்குப் போனான். Tây vîttukku pônân.	She went to her mother's house.
10. அந்த இராசாவுக்குரிய மாட்சிமையும் அதிகாரமும். Anda irâcâvukk'uriya mâdchimeiyum adigâramum.	The glory and authority of that king.
11. அத்தேசத்து மனிதர். Attêçattu manidar.	The people of that country.

EXERCISE 79.

TAMIL.	ENGLISH.
253. (a.)	
1. ஒருவன் பத்துப்பாரம் இரும்பு வாங்கி, ஒருவனிடத்திலே வைத்து, மற்றொருதேசத்திற்குப்போய், சில வருஷங்கள் கழிந்த பின்பு வந்து, அவனை "இரும்பைக் கொடு" என்று கேட்டான். Oruvan pattu bâram irumbu vângi, oruvaniḍattil veittu, matt' oru dêsattirku pôy, çila varushangaḷ kaṛinda pinbu vandu, avanei "irumbei koḍu" enru kèṭṭân.	A certain person having bought 10 loads of iron, left it with another, and having gone to another country, came back after some years and asked for his iron.
2. கொடுத்தவன் கெடுவிற்போய் அதைக் கேட்டதற்கு, வாங்கினவன் நான் உன் கையிலே வாங்கினதில்லை என்று சாதித்தான். Koḍuttavan geduvil pôy adei kêṭṭadarku, vânginavan, nân un-keiyilê vânginad'illei enru çâdit-tân.	At the appointed time when he who gave it asked for it, the man who had received it said confidently "I did not receive it from you."
3. நியாயாதிபதியினிடத்தில் போய் பிரியாது பண்ணிக்கொண்டான். Nyâyâdipadiyinidattil pôy prâdu paṇṇi koṇḍân.	He went and made a complaint to the judge.
4. அந்த வழியாக நடந்து வந்தார்கள்............... Anda vaṛiyâga naḍandu vandârgaḷ.	He came walking (on foot) that way.
5. இரண்டு செம்புகளில் நிறைய நீர் கொண்டுவரச் சொன்னான். Iraṇḍu çembugaḷil nirreiya nîr koṇḍu vara çonnân.	He told them to bring 2 brass vessels full of water.
6. நீ அவளிடத்தில் நெய் கடன் வாங்கினதற்குச் சந்தேகம் இல்லை. Nî avaḷiḍattil ney kaḍan vânginadarku çandêgam illei.	There is no doubt you did borrow ghee from her.
7. "மரத்தின் பழம் மரத்தண்டையே விழும்"...... Marattin paṛam maratt'aṇḍeiyê viṛum.	"The fruit of the tree will fall near the tree."
8. முளையில் கிள்ளாத மரம் முற்றினால் கோடரி கொண்டு வெட்டித் தள்ளவேண்டும். Muḷeiyil kiḷḷâda maram muttinâl kôḍari koṇḍu veṭṭi taḷḷa vêṇḍum.	If you dont pinch off the first shoot, bye and bye when it becomes a tree, you must cut it down with an axe.
9. மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும், உடலில் உயிரும் கலந்தது போல. Malaril maṇamum, eḷḷil eṇṇeiy-um, uḍalil uyirum kalandadu pôl.	As perfume in the flower, oil in the hemp seed, and life in the body are mingled.
10. ஓர் ஏரிக்கரைமேலே போனான்............... Or êri-karei mêlê pônân.	He went on the border of a tank.
11. மூக்குமேலே விரல்வைத்துப், பெருமூச்சு விட்டு, அப்படியா என்று விசனப்பட்டான். Mûkku mêlê viral veittu, peru muççu viṭṭu, appaḍiyâ enrru viçanapaṭṭân.	Putting his finger on his nose, and leaving a deep sigh, is it so he said sorrowing.